[illegible]

V1. No. 30 26 [illegible] 1928

[illegible]
[illegible], N28KN
N28.1.30
189013.

Reg. No. M. 2324. தனிப்பிரதி ரு. 0 3 0

கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்
வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா
இந்தியா, பர்மா, ஸிலோன் ரு. 7 8 0
புற நாடு ... ... ரு. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 1.] 1928௵ ஜூலை மீ 26௳ [No. 30.

20 NOV 1928 MADRAS

பொருளடக்கம்.

		பக்கம்.			பக்கம்.
1.	தலையங்கம் (Leader)	581	5.	கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A., B. L.	592
2.	காந்திமதி (A Novel) T. N. சேஷாசலம் B. A., B. L.	584	6.	அகத்திய முனிவர் R. முத்தையர்	595
3.	சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A., B. L.	587	7.	அருந்தமிழும் ஆங்கிலமும் N. இராமசாமி பிள்ளை	597
4.	தமிழ்ப் பாடம்	590	8.	வர்த்தமானம்	599

கலா நிலயம்.

சொல்வோரிற் கேட்பவ ரருமை IV.

187813

விலைக்கும் கூலிக்குமன்றிப் பொருளையும் செயலையும் கொடுப்பது கூடாது என்னுமிக் கொள்கை, தன்னின்று ஒன்றகன்று வேறாகி நஷ்டம் விளைக்க இயலும் என்னுமப்பொய்யெண்ணத்தால்விளைகின்றவிபரீதத்தை இரவீந்திரநாதரின் உதவிகொண்டு சென்றவாரம் விளக்கினோம். பிரபஞ்சாகாரமானதாயும் ஒருநாளும்உலவாத வைபவம் உடையதாயும் இருக்கின்ற ஆன்மாவை அவனவன் தோலளவென்றும் ஆயுளள வென்றும் குறுகக்குறுகக் கருதிக் கொள்வதால், அவனது உடைமை என்று எண்ணப்படுவதில் எள்ளளவு கைநின்று கழிந்தாலும் அவனுக்கு அதனால் ஒருகுறைவு வந்துற்றதாகத் தோன்றுகின்றது.

நஷ்டம் எனும்இக்கொள்கையிலிருந்து இலாபம் எனும் கொள்கையும் வேறன்று. தன்னளவு தானே என்னும் பரிபூரணத்தன்மை இலனாயின், இடம் பொருள் ஏவலாதி சாதனங்களால் தான் நிறைவடைய இயலுமென மதிக்கின்றான் பேதை மனிதன். இருந்து குறைந்ததை நிரப்புவது நஷ்ட ஈடு என்றும், இருப்பதை வளர்ப்பதும் இருந்திராததை அடைவதும் இலாபமென்றும் பொதுவாகப் பிரித்து வழங்குவோ மெனினும், வாஸ்தவத்தில் இவ்விரண்டிற்கும் உள்ளிருக்கின்ற கருத்து ஒன்றே. எல்லையற்ற ஆன்மாவை அடியோடு மறந்து, எல்லையுள்ள உடலையும் பொருள்களையும் எல்லையற்றனவாக ஆக்க முயல்கின்ற மதியீனமாம் அது.

ஆதலால், ஆசைக்கோர் அளவில்லாதது ஆச்சரியமல்லவே. கடல்மீது ஆணை செலநினைத்தும், இரஸவாதவித்தைக் கலைந்தும் காயகற்பம் தேடியும் நெஞ்சம் புண்ணாவதெல்லாம், ஆன்மசூன்ய நிலையினால், கால இட வர்த்தமான எல்லையற்றதாய் எதுவொன்றிருக்கின்றதோ அதைத் தன்நினைவினின்று துறந்து, அப்பாழ்மையை எல்லைக்குள் அடங்கியவற்றால் நிறைக்கப்புகுங்காலையில் அது இயல்வதின்றியே உணங்குகின்ற செய்திகளே யன்றி வேறன்று. எல்லையுள்ளது எந்நாளும் எல்லையற்றதாக மாற முடியாது. எனின், அவ்வாறு மாற்ற முயல்கின்ற முயற்சியாம் ஆசைக்கும் முடிவில்லை. அப்போதைக்கப்போது தோன்றுகின்ற ஆசைகளுக்குக் குறியும் எல்லையும் இருப்பதுபோல் நினைத்தாலும், அதை எய்தியவுடன், அவ்வாசையோ அடங்காமல் பிறிதொன்றின்பாற் பாய்கின்ற மனப்பான்மையை உணர்வது அரியதன்று. அலகிலாத ஆன்ம சிந்தனை நீங்கியதால் உண்டான பாழ்மையும் அலகிலாததே. அலகிலாதது இப்பாழ் என்று அறியாத மனிதன் அளவுள்ள வஸ்துக்களால் அது நிறைந்துவிடும் என்று எண்ணி, அவன் நினைத்த அளவு அப்பண்டம் எய்தினாற் போதுமென்று தேடுகின்றான். ஆனால் தேடியதை அடைந்ததும் அது பாழை நிறைக்கப் பற்றாமை தெரிகின்றது. எனின் அவன் மேலும் தேடுவது வியப்பாகுமோ! ககனவட்டமே உலகின் எல்லை என்று மதித்தவன் அந்த இடத்தை அடையப்போய் முடிவுகாண இயல்வதில்லை! அவ்

வட்டம் அகன்று அகன்று அப்பாற் போய்க் கொண்டுதானே இருக்கும்

இதனாற்றான் சனங்களின் பெரும்பான்மையோர், இரவீந்திரநாதர் சொல்கின்றபடி, "இலாபசாபல்யமே தம் நோக்கமாகவுடைய சங்கல்பங்களை முன்வைத்து" விவகரிப்பவ ராகின்றனர். மேன்மேலும் இலாபத்தை நாடுகின்ற நோக்கத்தின் இரகசியம், முன் சொன்னவாறு, மனிதர் தங்களைப்பற்றிக் கொண்டிருக்கின்ற அக்குறுகிய கொள்கையில் அடங்கி இருக்கின்றது. இக் கொள்கைக்கும் அதற்கிணங்கிய நோக்கத்திற்கும் ஏற்றதாய் இலாபத்தை நாடிச்செய்கின்ற செயல்களை இயக்குகின்ற பொய்யெண்ணங்கள் சிலவுள. அவைகளுள் வெளிப்படையாய்விவகரிப்பவைஇரண்டு. ஒன்று,"எனக்கு எனக்கு" என்று வெளவுதல். மற்றது, எண்ணிய இலாபத்தை எத்தனை சீக்கிரம் அடையக்கூடுமோ அத்தனை சீக்கிரம் அடையவேண்டுமென்ற வோர் அவசரம்.

எனக்கெனக்கெனப் பறிமுதல் செய்யும் சுயநயப்பான்மையை ஆராய்வோம். ஆன்மசூன்ய நிலையில் இருக்கின்ற மனிதனின் குறை, விட்டகன்றஆன்மாவைப் போன்றே, அளவற்றதாகையால், அயலார் கையுள்ள பொருள் எவ்வளவோ அவ்வளவும் தன் குறையை நிரப்பாமல் நிற்கின்றனவென இவன் எண்ணுவது இயற்கையே. மனதினின்று பிரபஞ்சம் மறைந்ததென்றால் மீண்டுமப் பிரபஞ்சமே தோன்றினாலன்றி அக்குறை தீர்வ தெங்ஙனம்! எனவே, அயல்வாழத் தாமும் வாழ்வோம் என்ற நினைவு இத்தகைய மனதில் நிலைநிற்றல் தர்க்க விரோதமாகின்றது. பிறருடன் போட்டியிட்டுப் பிடுங்கிக் கொள்ளக் கூடியமட்டில் பறிக்கவேண்டும் என்ற வெறியுடையவ னாகின்றான். பிறர்கையில் இருக்கின்ற பண்டம் எவ்வளவோ அவ்வளவும் தன்னுடைய குறைவிற்குக் காரணமாயிருக்கின்ற தென்னும் பேதைமை அவனைப் பீடிக்கின்றது. உலகத்திலுள்ள பொருளின் அளவிற்கு எல்லையுண்டாதலால் அதனின் ஒருபாகம், எவ்வளவுசிறியதேனும், அயலான் கை யிருக்கின்றவரையில் இவனுக்கு நிறைவு எய்தாதென ஏங்குகின்றான். ஆதலாற்றான் ஒவ்வொருவனும் 'தனக்கு' வேண்டுமெனத் தவித்தலைய நேர்கின்றது.

இவ்வாறு அலைகின்ற அலைச்சல் அமைதியாயிருக்க நியாயமில்லை. மிக்கதோர் அவசரத்தோடுகூடியிருப்பதே முறை. தன் ஆகாரத்தை (Personality) தன்னுடைய பண்டங்களால் அளவிட்டுக் குறுக்கியது போலவே, தனக்குரிய காலத்தையும் ஆயுளென்னும் அளவைக்குள் அடக்கிவிட்டான். ஆதலால், இவன் பெறுவதற்கு நினைக்கின்றவெல்லாம் அவ்வாயுளென்னும் கால எல்லைக்குள் பெற்றாலன்றிப் படும்பாடு பயனற்றதாய் முடியும் என்னும் எண்ணம் அவனை உறுத்திக் கொண்டிருக்கின்றது. இவ்வாறு உறுத்திய மனதோடு அவன் உழல்கின்ற நாளில் அவனதாயுளோ வெகு விரைவில் கழிந்து போகின்ற தென்பதை உணர்கின்றான். 'தேகம் நீங்குமென எண்ணிலோ நெஞ்சம் பகீர்' என்னத் தலைப்பட்டவுடனே, அது நீங்குமுன் பெறுவதற்குளதாய அத்தனையும் பெறவேண்டியது அவன் கொள்கையின்படி இன்றியமையாததாதல்பற்றிப் பரபரப்பு மிகுகின்றது. ஒன்றைவிட்டு ஒன்றைப் பற்றுகின்றான். காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள முயல்கின்ற முயற்சி எல்லாம் பெருங் காற்றாகி அவனையே தூற்றிவிட நேர்கின்றது. தவிக்கின்றான். அங்குமிங்குமோடி அலைகின்றான். இவனது அவசரத்திற்கு ஒன்று ஏற்றதாக இல்லாமற் போகவே மற்றொன்றுபற்றிச் சிறிதுபோது பார்க்கின்றான். அதன்வேகமும் இவனாயுளிற்குள் அடைவனவற்றை அடைவதற்குப்போதவில்லை. வேறொரு வழிநாடவேண்டி வருகின்றது. இவ்வாறே வழிதேடி ஓடுவதில் அவன் நாளெல்லாம் கழிய வாழ்வதற்கோ நேரமே இல்லை. சிறுவயதில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ஆண்டாகச் செல்வதாகத் தோன்றியிருந்த நமக்கு நாற்பதாண்டை நெருங்கும் பருவத்தில் ஆண்டுகளெல்லாம் நாளுக்கு நிகராகக் கழிந்துபோவது அநுபவபூர்வமாய் யாவரும் அறிந்திருப்பர். வருஷம் நாள் என்பன அவ்வவைகளுக்குள்ள காலவளவையில் என்றும் மாறாதனவாயிருந்த போதிலும், சிறு பருவத்தில் நாளொன்று வருடமாக வளர்வதும்,முதுமையில் வருடம்நாளளவிற்குத் தேய்வதும் ஏனெனில், ஆசையால் அல்லலுறுகின்ற பின்வயதில் நாமுற்ற அவசரத்தைக் காலத்தின் மீதும் சார்த்தி மதிக்கின்றதே காரணமாகும்.

இதுவரையில் நாம் சொன்னதை அறிந்தவர்க்குப் பின்வரும் இரவீந்திரநாதரின் வாக்கியம் நன்கு விளங்கும் :—

> எனக்கு எனக்கென்று சமயத்தைக் கைப்பற்ற வெறியுற்றுப் போட்டியிட்டுப் பதைபதைத்துப் பிடுங்கிப் பெற்ற இலாபசாபல்யமே தம் நோக்கமாகவுடைய ஸங்கல்பங்களை முன்வைத்துச் சத்தியத்தை எப்பொழுதும் பின்தள்ளும் இற்றை நாள், நமது பேராசை கட்டுக் கடங்காததாகின்றது. பொறுமையற்ற அவசரத்தால் அது கிரமமாக ஒன்றைச் செய்தடையும் முறையினூடு இயற்கையாயமைந்த தாளலயத்திற்குத் தன் சுருதியைக் கூட்டி இசைக்க மறுப்பதாகித் தலைகால் தெரியாத வேகத்திற்குரிய கருவிகளை யெல்லாம் பிரயோஜனப் படுத்திப் பார்க்க விரைகின்றது.

இயற்கையாயமைந்த கீதம் சாச்வத நினைவில் ஆழ்ந்த சாந்தியேயாகும். அது ஓங்காரநாதத்தால் எழுகின்றது. அதற்கிணங்கி மனிதன் தன்வாழ்க்கைப்பண் பாடுதற்கு அவன் அவசரம் இடங் கொடுப்பதில்லை. தாளமும் சுருதியும் தவறிப் போய்ப் பிரபஞ்சத்தோடு இலயம் பெறாமல் அவன் நாள்களெல்லாம் அபஸ்வரமாய் முடிகின்றன. அதாவது, அவன் பிரபஞ்சப் பொதுவாழ்க்கையில் அமைதியோடு கலந்துவாழக் கூடாதவனாய்த் தானுங்கெட்டு மற்றவரையுங் கெடுத்து அமைதியின் இன்பத்தைச் சிதைத்து விடுகின்றவனாகின்றான்.

இரவீந்திரநாதரின் முன்கண்ட வாக்கியத்துள் அடங்கிய இலாபசாபல்ய ஸங்கல்பங்களுக் குரிய செய்தியும் அதன் நோக்கமும் அந்நோக்கம் விளை

வதற்குற்ற காரணமும், அதனால் தோன்றும் அவாவும் அவாவிய பொருளைப் பெறுதற்குறும் அவசரமும் யாவும் எம்மாலியன்றவளவு விளக்கித்தந்தோம். சத்தியத்தைப் பின்தள்ளுவது இக்காலத்தின் இயல்பென்று அவர் அங்குக் கூறுவதை நாமின்னும் விளக்கவில்லை. சத்தியம் என்பது யாதெனப் பலமுறை இப்பத்திரிகையில் விரித்துரைத்திருக்கின்றோம். ஓம் என்னும் சொல் குறிக்கின்ற அப்பிரபஞ்ச ஒற்றுமையே (Cosmic Unity) சத்தியமாம். அந்நினைவு இமைப்பளவும் மறவாமல் நிற்றல் சத்தியநிலை. அதனையேபற்றி யொழுகல் சத்தியமார்க்கம். உள்ளதை உள்ளபடி உரைத்தல் ஆகிய வாய்மை, மெய்நெறி நடப்போர்பால் நிகழ்கின்ற ஒரு செய்தியேயன்றிச் சத்தியம் என்னும் தத்துவம் முழுவதும் அவ்வாய்மையில் அடங்கிவிடவில்லை. இவ்வாறே கொல்லாமை வெகுளாமை நலியாமை முதலியதர்மங்களும் சத்தியநிலை நிற்போர்க்கு இயற்கையாய் அமைந்தவை.

எல்லாம் ஒன்று என்னும் மெய்த்தத்துவத்தைத் தலையெடுக்க வொட்டாமல் பின்னுறத் தள்ளிக் கொண்டே வந்தாலன்றிச் சுயநயமும் அவசரமும் எப்படித்தோன்றும்! எல்லா மெங்கும் எந்நாளும் ஒன்றேயெனின் நான் என்ற நினைவேது, எனதென்றபொருளேது. மற்றிவ்வேற்றுமைத் தோற்றத்திற் கடிமையாய பொய்ப்பேய் பிடர்பிடித் தாட்டுவதால் இயற்கையோடிணங்கிய சாந்த நடைக்கு மாந்தர் சலிப்படைகின்றனர். தலைகால் தெரியாத வேகத்தோடு அவர் தம் அற்ப இலக்ஷியங்களுக்கருகு உந்துவதற்குரிய செயற்கைக் கருவிகள் புதிது புதிதாய்த் தேடத் தலைப்படுகின்றனர். இக்கருவிகள் பலவிதம். மோசம் களவு கொலை வர்த்தகம் தொழில் சண்டை என்பன அவைகளிற் சில. இவைகளுள் முதல் மூன்று தீயனவென்றும், பின்னிரண்டு நலந்தீமை என்னுந் தன்மையற்ற சாதாரண விவகாரங்களென்றும், சண்டையோவெனின், வெல்லாக்கால் தீமையும் வென்றிடின் நலமே என்றும், கருதப்படுகின்றன ஆனால், குறிவைத்த வொருபொருளை விரைவினில் எய்துதற்கு இயன்ற கருவிகளில், "பொய்யை மெய்யென மயங்கச்செய்யும் பிரசாரங்களும் ஒன்று" என்று கவி இரவீந்திரநாதர் வெகு நுட்பமாய் எடுத்துக் காட்டுகின்றார்.

இக்காலத்தில் கொலைகளவாதி கைதவ மார்க்கங்களையும் தேசவலிகொண்டு வெல்வதையும் கடிந்து சத்தியத்தையே பின்பற்றவேண்டும் என்னும் ஓர் பிரசாரம் நிகழ்ந்து வருவதை யாவரும் அறிவர். இந்தக் கொள்கையைக் கையாள்கின்ற மேன்மக்களுடைய நோக்கம் எத்துணை உயர்ந்ததாயிருந்தபோதிலும் அதனைப் 'பிரசாரம்' செய்கின்ற வகையிலோ அதுபொய்யேயாய் முடிகின்றது. அரசியல் முறையிலேனும் இல்வாழும் வாழ்விலேனும் விரும்பிய ஒரு நிலையை அடைதற்குப் பல்வேறு சாதனங்கள் இருப்பினும், அவையாவும் அந்தத்தில் அவலமாய்ப் போவதை அநுபவபூர்வமாய்க் கண்டுளோ மாதலால், சத்தியத்தையே யாவற்றிலும் சிறந்ததாய்க் கொண்டு ஒழுகுதலே தக்கதாகும், என்பது இச்சத்தியப் பிரசாரத்தின் உட்கருத்தாகும். இதனால் சத்தியமும் ஒரு கருவியாகக் கருதப்படுகின்றதேயன்றி வேறில்லை. சத்தியத்தைச் சத்தியத்திற்காகவே எய்தி மகிழாமல் அதனை வேறொன்று எய்துவதற்கு உபாயமாகக் கொள்வதினும் இழிவுடை நோக்கும் பிறிதொன்று தேடலரிது. எனக்கென்ற வொருமையிலோ நமக்கென்ற பன்மையிலோ ஒன்றைப் பெறவேண்டு மென்பது சத்தியத்திற்கு மாறான பொய்யின் செயல். ஆதலால் சத்தியத்தைக் கைக்கொள்வதால் நாம் அடைதற்கு இருக்கின்ற பயன் இவை இவை எனக் கட்டுரை வரையும்போதும் பிரசாரம் செய்யும்போதும், 'சத்தியம் மெய்ம்மை வாய்ம்மை, நலியாமை' முதலிய சொற்கள் இடைக்கிடை பயின்று வருமேனும் முன் குறித்த பொய்யே முதலில் வைக்கப் பெறுகின்றது. அந்தப் பயன் அல்லது இலக்ஷியத்தை அடைவதற்குச் சத்தியம் ஓர் உபாயம் என்ற கருத்தேகொண்டு நடப்பதால் அது பின் தள்ளப்படுகிறது. 'இன்ன இன்ன நஷ்டம் தவிர்க்க வேண்டும், உனக்கு இன்ன இலாபம் நிலைக்க வேண்டும்' என்று பாக்கப் பேசுவது பொய்ப் பிரசாரம். அப்படி யிருக்க, 'இதற்குத் தக்க உபாயம் மெய்யே,' என்று வற்புறுத்துவதாலேயே, மெய்ம்மையைப் பிரசாரம் செய்வதாக நினைப்பது பொருந்துமோ! பொய்யை மெய்யென்று மயங்குகின்ற மயக்கமாயிற்றே இது. சாதிக்க வேண்டியதே சத்தியம். அதனையோ சாதனமாய்க் கொண்டக்கால் பொய்யன்றி அது சாதிக்கும் சாதனை வேறு யாவதாய் இருத்தல் கூடும். இரவீந்திரநாதர் கூறிய இக்கருத்தை நாம் முன்னரே (6-வது இதழ்த் தலையங்கம், 102-வது பக்கம்) விளக்கி வரைந்துள்ளோம். மீண்டுமிங்கவைகளை விரித்துரைத்தல் மிகையாம். 'சத்தியத்திற் சிறந்தவோர் சாதனம் இல்லை' (Honesty is the Best Policy) என்று பாராட்டுவோர் அம்மெய் நின்று வழுவியே தீர்வரென நாமங்குச்செப்பியது போலவே, இரவீந்தரநாதரும் இங்குச் செப்புவதுமல்லாது,அவ்வாறு வழுவதற்கு நாம் காட்டிய காரணத்தையே இக்கவிஞர் பெருமானும் காட்டுகின்றார். பயனைக் கருதினால் அதை எய்துதற்கு ஓர் அவசரமும் கூடவே தொடரும். இந்த விரைவிற்கும் சத்தியத்தின் சாந்தத்திற்கும் வெகு தூரம். பிரசாரம் பலமாய் நடந்தாலும் பயனிற்கவாவிய மனமோ பொறுமையின்று வழுவிவிடுகின்றது. சத்தியம், நீண்ட வழி, மந்தகதி எனவே,

> "பேராசையானது, தான் படர்கின்ற பாதையின் முடிவில் நினைத்த லாபம் பெருவதற் கிருப்பதாதலால் தன் பாதையைச் சுருக்கிக் குறுக்கி முயல்கின்றது."

என்பர் நம் கவிவரர். இதனினும் பொருளுரை பிறிதொன்று காண்பதரிது. இச்சிறு மாநுட நாள்களுக்கு இது இது வேண்டுமென்னும் பொருள்கள் முக்கிய இலக்ஷிய மாயிற்றென்றால் சத்தியம் ஒரு மார்க்கமாகவேதாழ்ந்தது.சத்தியத்திற்குரியஇடமோ அத்தாழ்மையன்று. சத்தியத்தை உண்மையாய் நாடுகின்றவர்களுக்கு, முதலும் அது, முடிவும் அதுவே. செடியோடு இருக்கின்ற ஒரு மலரைக் கண்டு அத

ளைப் பாராட்டி மகிழ்வதை ஒத்தல் வேண்டும் சத்தியத்தின்பால்மாந்தருக்குள்ளசம்பந்தம். அப்பொழுது தான் அவனுக்குஅம் மலரினிடத்திலேயே ஓர் ஆர்வம் இருக்கின்றதென்றெண்ணலாம் அப்படிக்கல்லாது அம்மலரைப்பறித்து ஒருவன் சூடிக்கொள்ள நினைக்கும்போது தன்மேலிருக்கும் ஆசையால் அம்மலரை வேண்டுகின்றான் என்பது வெளிப்படை. தன்னுடையஅலங்காரத்திற்கு அந்தமலர் ஒருகருவியாகின்றது. ஆதலால் மலரை நிலைவிட்டுப் பறித்துத் தனக்குப் பிரயோஜனப் படுத்திக்கொள்பவன் மலரினுடைய அழகிற்கும் மென்மைக்கும் ஈடுபட்டவனல்லன். தன்னுடைய ஆசைக்கே அடிமையாயவன். மெய்ம்மையை மெய்ம்மைக்காகவே பாராட்டும் மனப்பான்மையுடையவர், காம்போடு கூடிச் செடியில் இருக்கும் புஷ்பத்தைக் கண்டளவில் மகிழ்கின்றவர்களுக்கு நிகராவர். சத்தியத்தை வேறொன்று அடைவதற்குக் கருவியாகக் கையாள்பவர், அம்மலரைப் பறித்துத் தாம் அணிதற்கு நினைப்பவரை ஒப்பவர். இதனைக் குறித்தே,

"சத்தியமோ காம்பொடு கலந்தமலரெனத் தன்னை
வாஸ்தவமாக நாடுகின்ற நாட்டித்தினூடேயே
உருவி யுறைகின்றதாகும்."

என இரவீந்திரநாதர் செப்பியுள்ளார்.

ஆதலால், மெய்ந்நிலையே வழியும் பொருளும் பயனும் மற்றுளயாவது மாயிருத்தல் போகச் சத்தியத்தால் பெறுவது என்று கூறுதற்குப் பிறிதொன்றில்லை. அப்படி உளதெனக் கூறுவோமாயின் அந்நிமிடமே சத்தியம் நம்மைத் துறந்து அகன்று பறந்தோடும். சத்தியத்தை ஒரு தேவதையாக உருவகம் செய்கின்றார் நம் கவி. அத்தேவதையைக் கண்ணாரக்கண்டு வாயார வாழ்த்தி மனமாரமகிழ்ந்து அளவளாவும் வாழ்வே சத்தியவாழ்வும் அதனால் எய்தும் மெய் இன்பமும் ஆகும். "நின்னையே எனக்கு நல்குவாய்" என்னும் வரம் அல்லால், "நீ எனக்கு இன்ன நலம் அளித்திடு" என்று வேறொன்றை வேண்டுவது சத்தியத்தைக் கைக்கொள்வதாகாது. சத்தியத்தை ஆராதித்துப் பூசனை பலபுரிந்து வரம் கேட்பதற்கும் இச்சகம் பேசி யாசிப்பதற்கும் பேதம் இல்லையே. மோசச் சூழ்ச்சி இரண்டிலும் மறைந்திருக்கின்றது. பிரயோஜனத்திற்காக உபயோகப்படுகின்ற மெய்யெல்லாம் போலிகளே. ஆயின் மெய்போய்ப் பொய்யே நிற்கும். இக்கருத்து,

"காதலால் அளவளாவும் தன்மையை அகற்றி, அச்சத்திய தேவதையை யாதாவதோர் பிரயோஜனத்தைச் சுமந்துவருகின்ற வாகனமாக உபயோகப் படுத்துவதாயின், அவன் பிரயோஜனம் எனுமப் போலித் தோற்றத்தை மோசமென விட்டகன்று போகின்றான்."

எனும் இரவீந்திரநாதரின் வாக்கியத்தில் அடங்கியிருக்கின்றது. இதனிற்கு உதாரணமாக வருகின்ற சீதாபிராட்டியின் செய்தி மிக்க பொருத்தமுடையது. பல இடும்பைகளுக் கிடையே இராமன் சீதையாகிய சத்தியத்தைப்பெற்றான். பிறகு அச்சீதையைச் சோதித்துத் தன் குடிகளின் மதிப்பைப்பெற முயன்றபோது, சத்தியத்தால் சாதிக்க நினைத்தது வேறொன்றாயிற்று. உடனே அவள் விட்டகன்று போயினாள், குடிகளின் நன்மதிப்பைப் பெறுவதின் நிமித்தம் இராமன் நினைத்த இராஜ்ய தந்திரமது. இந்தத் தந்திரத்தால் தற்கால அவசியத்திற்குச் சத்தியத்தைச் சாதனமாய்க் கையாள முயன்றதாற்றான் அச்சத்தியம் அவனை அடியுடன் விட்டுப் போய்விட்டது. அரசனிடத்தில் ஒரு பயனை எதிர்பார்த்து அதற்குச் சாதனமாய்ச் சத்தியத்தைக் கைக்கொண்டாலும் கிடைக்கும் கதி இதுவேயாகுமென்று கூறவும் வேண்டுமோ! ஆதலாற்றான் நம்கவிஞர் 'பொய்யை மெய்யென மயங்கச்செய்யும் பிரசாரமென்று' இதனை அழைத்தார்.

(தொடரும்)

காந்திமதி என்னும்
காந்தார நாட்டுக் கட்டழகி.

(567-வது பக்கத் தொடர்ச்சி)

27. மண்மகள் திருமணம்.

கைத்தன உதடேனும் குறுங்கண் பார்வையோ டகன்ற நரபாலனைக் கருதினனாய்ச் சித்ராங்கன் அருகிருந்தவோர் ஆதனத்தி லமர்ந்து, முன்னெலாம் தானிழைத்த இழிசெயல்களை நினைத்துக் கழிவிரக்கம் கொண்டழுங்கினன். வெளிச்சென்ற நரபாலன் விரைவினிற் போய் தாமோதரனுக்கு உற்றதையுரைக்க அவ்விருவரும் எண்ணி யங்கு வந்த கருமத்தை அன்றே முடிப்பதெனத் துணிந்தனர். காலமும் இடமும் வாய்த்ததெனினும் அவர் செயற்குக் கருவியாதெனுந் திகைப்புப் புகுந்தது. மாதவி பாடவும் படகு சாயவும் இடையே நிகழ்ந்திராவிடின் கெடுநிவர் ஆராய நிமித்தமில்லை. நீரிற் கவிழ்ந்த சிறுபெட்டியுள், இனையளவு இன்றாலும் நமனுலகு நல்கும் மருந்துகள் இருந்தன. மருத்துவப் பண்டிதர் அத்தனைபேரும் ஒன்று சேர்ந்து சோதித்தாலும் மாண்டவனுயிர் வஞ்சகர் வைத்த விடத்திற்கு இரையாயிற்று என்னலியலாது. ஆதலால், அத்தகைய கடுவிட்டு அரசிளங்குமரனைக் கொன்றபின், அவன் தானாக இறந்தானென்று தாங்களுஞ் சேர்ந்தழுதால் தம்பால் எவ்விதச் சந்தேகமும் சூழ்ந்திடா தென்னுந் துணிவோடு புறப்பட்டவர்க்கு, அவ்விஷம் இன்று இல்லாமற் போனது பெரியதோ ரிடையூறாய் நின்றது. வேறென்செய்வர். சித்ராங்கன் மாய்ந்தா னென்றல்லாது கொலைதான் உண்டனன் எனும் சந்தேகம் கஜேந்திரஸிம்மன் விச்வகேசரி முதலாயினோர்க்குக் கடுகத்தனை தோன்றினும், பிறகு தமதுயிரிற்குமுன் தலையே போய்ப் பாதலநாகம் சேராகு மென்பது இவ்விரு பாதகர்க்கும் தெளிவாகத் தெரியும். அதுவும் அந்த வெட்டிற்குக் கத்தி தீட்டிக் கொடுப்பவனும் விராடபத்திரனாகவே இருப்பான் என்பதிலும் இவர்களுக் கையமில்லை. ஆதலாற்றான் கோமகனை எவ்விதம் மாய்ப்பதெனும் முடிவிற்குவர இவர்க்கிடையே வெகு நேரமாயிற்று.

ஆதனத்தமர்ந்த சித்ராங்கனிற்கு அங்கு இருப்புக் கொள்ளவில்லை. கலங்கிய அவன் மனத்தில் தோன்றித் தோன்றி மறைந்த எண்ணங்கள் பற்பல. "போழுது மாதரோடோட நான் பின்னிடைந்தேனென நரபாலன் என்னுதற்கஞ்சியோ இப்புன்தொழில் நாடகத்திற்குடன்பட்டேன்," எனத் தன்னுளே கூறிக் கையொடு கை-

யறைந்தவனாய் அவ்விருக்கை விட்டெழுந்து பலகணிக்கயல்நின்று புறத்திடம் நோக்க, மாளிகையின் வெளிச்சுவர்க்கருகே பருத்துயர்ந்த உருவத்துப் பூதமொப்பா னொருவன் தாமோதரனுடன் பேசிமுடிந்து அப்பொழுதே மீள்வதைக் கண்டான். கண்டதவன் முதுகேயாதலால் பண்டவனைப் பார்த்திருக்கின்ற நினைவு சித்ராங்கனுக்கு வர நியாயமில்லை. அல்லாமலும் இளவரசன் கருதியபடி அவன் முன்னரே மாண்டவனு மாவான். சித்ராங்கனிற்கோ அவனையறியாமலே மயிர் சிலிர்த்தது.

இதற்கிடையே நரபாலனவணெய்தி உணவிற்கழைக்க அவனோடு போசனம் அமைத்தவிடம் சித்ராங்கன் சென்றடைந்தான். அடைந்தவன் உண்டியின்முன் அமரும்போது தாமோதரன் 'இப்பொழுதே' என்று நரபாலனின் காதோடோத அவன், "வேண்டா, இறுதிப்போசனம் இவன் காண்பது இதுவேயாதலால், இவ்வொருபோதேனு முண்ணட்டும்." என்றதற்கு வைத்தியன் ஏதோ முணுமுணுத்த வண்ணமாய் அவ்விடம் விட்டகன்றனன். போசனம் முடிந்தது. அறையின் கதவுதிறக்கத் தாமோதரன் வந்து எதிர் நின்றான். கைதவக்கள்வர் அவ்விருவரும் ஒருவரையொருவர் எதிர் நோக்கிய விதம் சித்ராங்கனிற்குக் கலக்கம் விளைத்தது. கதவிற்குவெளியே காலோசை தன் செவியிற் பட்டதாகவும் சித்ராங்கன் எண்ணினான். நரபாலனிடம் சென்றான். அவன் தோளின்மீது தன் கைகளை வைத்துக் குலுக்கி, "நரபாலா, வேறெந் நாடகத்திற்கு ஒத்திகை பார்க்கின்றீர். ஏதேனு முளதாயின் களபலி சூத்ரதாரிகளே யாவார். நினைமின்" என்றனன்.

"ஹி! ஹி! ஹி! நாடகத்தின் பேர், "மண்மகள் திருமணம், ஹி! ஹி!" எனத் தாமோதரன் இளித்தான்.

"பாத்திரங்கள் ?" என்று இளவரசன் வைத்தியனின் முகம்நோக்கி வினவினான்.

"காந்தாரநாட் டிளவரசன்—நிலமகளைப் புல்லிக் கிடக்க........"

"பதரே, யாது பகர்ந்தனை !..........." என வைத்தியனுக் கருகுசாரும் சித்ராங்கனைச் சீற்றம் விலக்குவான்போல் நரபாலன் அவனது கைகளை இறுகப்பிடித்துக் கொள்ளவும் தாமோதரன், "ஹி! ஹி! ஹி!" என்றிரைந்து சிரித்தான். கதவுதிறந்தது. நாம் முன்னர்த்துக்கிவிட்டுத் திரும்பிய மகோதரனே, காலனூர் விடுதூதனெனக் கையில் பாசமுங்கொண்டு அங்குத் தோன்றினான். பிறகு நடந்தது இரண்டொரு நிமிட வேலை. "நிரயமும் நின்னைத் தன்பால் வைத்திடக் கூசியே உமிழ்ந்ததோ, கொடி..........." எனுமுன்னம் சித்ராங்கனின் வாயுந் துணியடைத்து விட்டனர். கையையுங் காலையும் கட்டி இளவரசனை ஓர் மூட்டை யென மகோதரன் தூக்கினான். வாய்மொழி இயம்புதற்கு வகையற்ற இளவரசன், "நீயுமா ?" என்பான்போல் நரபாலனை நோக்கியதால் ஏதுபயன் !

காளைக்கன்றைக் கவ்விச்செல்லும் ஓர் கடும்புலியைப் போல மகோதரன் சித்ராங்கனைத் தூக்கி மற்றிருவரும் வழிகாட்டக் கீழிடம் அடைந்தான். யுத்தகாலங்களில் ஏதேனும்காரணம்பற்றிச் சிறிதுகால் ஒளிந்திருக்க நேருமாயின் அதற்காகப் பொதியறை யொன்று அக்கோட்டையில் அகழப்பெற்றிருந்தது. அப்பாழடைந்தவறையிற் கொண்டுபோய்ச் சித்ராங்கனைக் கிடத்தினர். மண்ணிலே இளவரசன் புழுவெனப் புரண்டு, கைத்தளை சிறிது நெகிழ்ந்ததால் வாய்த் துணியை விலக்கிப், "பாதகா, படுகொலை புரியவும் வல்லையோ," வெனக் கூவினான். "ஹி!ஹி! ஹி!"என்று இளித்தவனாய் வைத்தியன், நரபாலனையும் மகோதரனையும் அழைத்துக் கொண்டு வெளிவர, அப்பிலத் துவாரத்தின் இருப்புக் கபாடத்தை அடைத்துப் பூட்டிட்டபின் மூவரும் அகன்றனர். இத்தொழில் சூழ்ந்த அத்தீயவரிவர் உள்ளமும், அதை இயற்றிய மகோதரனின் உருவமும் போன்று அப்பொதியறை இருண்டு கிடந்தது. "தந்தையே தந்தையே, மண்மூடி மாள்கின்றேன், பாவியேன், வஞ்சகர் கை எலக்குற்ற விதிகேட்டு வருந்தவோ, எந்தாய், யான்பிறந்தேன். மணிவாளன் தனிமகளின் குழலன்ன இவ்வீங்கிருள்வாய் அகப்பட்டுக் குழைகின்றேன்—விராடா, வளநாடும் நினதேயாக" என்றின்னபல இருளும் மருளுமாறு கதறி இளவரசன் அயர்ந்தான்.

கொண்டுவந்த விஷம் வழியிலே கைதவறிப் போயினதால் இனி, அநேகநாள் ஆகுமெனினும் பட்டினி போட்டுக் கொல்வதே பிறரறியும் கரியின்றி உயிர் நீங்கும் உபாயமென வோர்ந்த அக்கன்னெஞ்சக் கயவர் செய்த காரியம் இது மாளிகை ஏவலாளர் சங்கை கொள்ளா வண்ணம், இளவரசன் நோயுற்றுத் தனதறையே தங்கினதாகச் செப்பிவைத்து யாவரும் அவனண்டை அணுகப்படாதென்று விதித்து இருந்தனர். அன்று மாலையிலேயே, நரபாலன் சொல்லி வைத்திருந்தபடி அவனது போர்ச்சேவகர் பலர் வந்து சித்ரமோகன மாளிகையை அடைந்தனர். அவர்களைக்கொண்டு மாளிகைக்கும் வெளிப்புறத்திற்கும் போக்கு வரவில்லாதபடி காவலமர்த்தினான். மறைந்திருந்த மனைவிட்டு மந்தாகினி வெளிவரக் கூடாதவளா யிருந்தாளாகையால் அவள் காதிற்கு இளவரசன் நோயுற்றனனென்னும் பொய்ச்செய்தியும் எட்டவில்லை

சித்ராங்கனிற்கோர் நோய் உற்றதெனக்கேட்ட காந்திமதியும் மாதவியும் கரையறியாக் கவலையுள் ஆழ்ந்தனர். மாளிகை காவலில் இருப்பதால் அகல்வதற் கியலாராகி இருவரும் இணைபிரியா நண்பராயினர். முன்னாள் கலாநாதன்மீது தான்கொண்ட சந்தேகத்திற்கு இலக்காயிருந்தவன் இப்பாண்மகனே என்பதும், தன் நம்பியக் காதலன் இவன்பால் வசையிலா வழியே நடந்தனான் என்பதும் அறிந்தபின், காந்தி மாதவியை முன்னினும் அதிக அன்போடு ஆதரிப்பாளாயினள்.

இரண்டு தினங்கள் கழிந்தன. மூன்றும் நாள், மாளிகையைச் சூழ்ந்த தோட்டத்தில் உலவியிருந்த மாதவி உடல் நடுங்கி முகம் விளர்க்க வோடிவருவதைக் கண்ணுற்ற காந்திமதி திகைத்தவட்கெதிர் விரைந்து, "என்னுற்றது ? சித்ராங்கன் மாண்டனனோ ?" என வினவினள்.

"அதனினுங் கொடியது. பட்டினியாற் சாகின்றான் சித்ராங்கன்," என்றனள் மாதவி.

"உணவு கொள்ள நோயால் மறுக்கின்றானோ ?"

"அன்று வதையே உண்கின்றான் !"

"ஐயோ ! எவ்விதம்...எங்கே......என்...யார்!"

"அயர்ந்த சிந்தையளாய் நானென் கால் கொண்டுந்திய இடமே மேவி இப்பொழிலின்கண் இருந்திருந்த போது, எனது நாய் வந்தென் ஆடையைப் பிடித்திழுக்க அது அழைக்கும் வழி ஏகினேன். மாளிகைக்குப் பின்புறமிருக்கும் ஒரு சுவரினருகு என்னையது கொண்டு போய் விட்டது. விட்டுவிட்டு, அச்சுவரின் அடியில் எலி அகழ்ந்த வொரு சிறு வளையைப்போல் தோன்றிய புழையினில் தனது மூக்கை இடுவதும் குரைப்பதுமாயிற்று. அங்கு யான் சென்றவுடன் யாரோ குமுறிக்

குழறிக் கதறும் ஒலியொன்று கேட்டதென எண்ணினேன். எத்திசைநின்று இவ்வொலி வந்ததென யான் திகைக்கும் எல்லையில் அந் நாய் என்னை அவ்வளையருகு முட்டிமுட்டித் தள்ளிக்கொண்டு போயிற்று. அங்குச் சென்றதும் என் காலின்கீழே பாதலத்தி லவ்வொலி பிறந்ததென வுணர்ந்தேன். பின் அப்புழையூடு என் செவியை வைத்துக் கேட்க, "பசி, பசி, பசி, பசிக்கின்றதே," என்ற சொற்கள் பல மொழிகளுக்கிடையே என் காதுள் தைத்தன. இளவரசனின் குரலே அது."

"என் செய்வதம்ம, இளவரசன் பிலத்துள் புதையுண்ண எவ்வாறு நேர்ந்திருக்கும்?"

"காந்திமதி,காதகர் யாவரோ கொலைகருதிச் செய்ததாயிருத்தல்வேண்டு மிது?"

"கொலையோ கொலை யென்று நாம் கூவினாலோ! என்னுள்ளம் பதைக்கின்றதே! என் செய்வேன்...அப்பொதியறை புகுநெறி யாண்டுளது?"

"வேண்டா, உதவிக்கு யார் வருவர். கொலை நினைத்த கொடுமையோர், வழியுங் காப்பர்."

"மற்றென் செய்வது, காந்தாரநாட் டிளவரசன் உணவின்றித் தனதின்னுயிர் துறப்பதோ!"

மாதரிவ ரிருவரு மொருவர்முக மொருவர் நோக்கிக் கண்ணீர் கலுழ்ந்து நின்றார். தாமங்கிருந்தும் இச்சதியைத் தடுக்கும்வகை தெரியாது தாழ்வதோவென ஏங்கினர். பச்சைப் புண்ணில் மணல் வைத்துத் தேய்த்தது போல் இந்நினைவு மாதவியின் மனத்தை உறுத்தியது, காந்திமதிக்கோ காலுங் கையும் நடுங்கின. இளவரசனைக் கொல்லப்புகுந்தவர் யாவரா யிருத்தல் கூடும் என்ற எண்ணம் அவர் மனதில் எழுந்ததில்லை. அவனைக் காப்பதெவ்வித மெனக் கருதுவதிலேயே ஆழ்ந்திருந்த மனதில் பிறிதொன்றற் கிடமேது! செய்யும்வகை யுணராமல் சிறிதுபோதிவர் தயங்கி நிற்கையில் காந்திமதியின் முகத்திலோர் ஒளி பரவியது. விரைந்து அவள் உள்ளறைசென்று, தமக்கென்று ஆக்கிவைத்திருந்த அன்னத்தைப் பாலொடு குழையக் கலந்து ஓர் பாத்திரத்தில் பெய்து வெளிவந்தாள். வந்தவள் கருத்தை மாதவி வினவ அவள், "சுவரிற்கருகில் நாணல் செழிப்பாக வளர்ந்திருக்கின்ற தல்லவா?" என்று கேட்டுக்கொண்டே புறப்பட, மாதவி அவளைத் தடுத்து, "நங்காய், ஆம், நீ நினைப்பதை யுணர்ந்தேன். மற்று, இதற்கு நீ செல்லவேண்டா. இளவரசற் குதவி புரிவதை அக்கொலைஞர் கண்டால் உன்னுயிரை மாய்க்காது விடார். நானே சென்று செய்கின்றேன் அக்காரியத்தை. அமுதைக்கொடு என்கையில்" என்றாள்.

"என்னைக் கொல்பவர் கண்டக்கால் நின்னைத்தான் விடுவாரோ......!"

"விடார். எனினும் அக்கோமகற்கு உயிர் அளிக்கும் உரிமை எனக்கேயுளது."

"எவ்வாற்றால் இது செப்புகின்றனை?"

"வாதித்து நிற்கும் வேளையோ, இது, காந்திமதி" என்று மாதவி அவள் கைநின்றும் பாத்திரத்தைக் கவர்ந்துகொண்டு........" அல்லாமல், இடமும் எதுவென்று நீ அறியாய். இரவேமும் செல்வோமெனில் அதனால் ஆபத்து அதிகமேயன்றிப் பயனில்லை. இக்காரியத்தில் ஒருத்தி மாண்டாலும், இளவரசற்கு வேறுதவி தேடிச்செய்ய ஒருத்தியேனும் இருக்கட்டும்," என இயம்பியவாங்கே விரைவுடனகன்றாள். தான் தனியேனும் அவளுடன் சேர்ந்தேனும் செல்லப்படா தென்றதற்கு இவை தக்க காரணங்களாய்த் தோன்றியதால் காந்திமதி அவளைப் பின்தொடர்ந்து ஏகவில்லை.

பாலடிசில் பெய்த பாத்திரத்தைத் தன்னுடைகளுக்கிடையே மறைத்துக்கொண்டு செடி கொடிகளுக்கூடே ஒதுங்கிச் சென்ற பாண்மகள் குறித்த இடம் அடைந்தவுடன், அங்கு நீண்டு வளர்ந்திருந்த நாணலொன்றை அறுத்து அதனுள்ளிருந்த சோற்றைக் களைந்து குழாயாக்கி அக்குழாயைச் சுவரிற் கடியிலிருந்த புழையுள் நுழைத்து அதன்வழியாய், "அரசே, அண்ணலே, எனதுயிரின் இருக்கையே......செல்வமே" என்றழைத்தாள். உணவின்றிச் சோர்ந்திருந்த சித்ராங்கனது செவியில் இவ்வினிய சொற்கள் குழாயின் வழியாய்ப் படுதலும், தனக்கயல்நின்று யாரோ அழைத்தனரென மதித்துச் சூழிருளைத் தன் கைகளால் துழாவினான். நாணற் குழாய் அவன்கைக்குளட்டியது. அதை உணர்ந்த மாதவி, "ஆம், ஆம், ஐய, அதனை நின்வாயகம் சேர்த்துக்கொள், பாலமுது ஊற்றுகின்றேன்" என விரைவுடன் கழறினாள். அறிவும் உயிரும் குறையாய்க்கிடந்த சித்ராங்கன் கூறியது இவளிற்குக் கேட்கவில்லை. ஆதலால் அவள்மீண்டும், "சித்ராங்கா நீ சொல்வது கேட்கவில்லை. இன்னொருமுறை இயம்புவாய்" என்று அக்குழாயின் வாயைத் தன் காதோடு வைத்துக்கொண்டாள். "நரபாலா, கொடியோய். என்னுயிர்க்கு இன்னும் நமன் காக்கப்படா தென்றோ நஞ்சும் கூட்டிக் கொணர்ந்தனை!" என்று அவன் நெட்டுயிர்ப்பு வீங்கியது இப்பொழுது இவள் செவிக்கு எட்டியது.

"அன்பே, அற்றன்று. பாண்மகள்......மாதவியை மறந்திலையாயின்......அவளே நான்."

"அடி பாவி, நீயுமா நரபாலனுக்குத் துணையாய் அவன் வேலையில் அமர்ந்தனை—உயிர் போமளவும் பிழைக்கின்ற நம்பிக்கை உளதாதலால், விஷத்திற்கு நான் வாய்திறக்க மாட்டேன்."

"சித்ராங்கா, சந்திரன்ஒளிதவழ் நந்தவனத்துலாவ, அன்றிற்சேவல் ஒருகண்துயின்று மறுகண்ணால் தன்பெடையைப் பார்த்திருக்கும் அன்பு நோக்கி, நீயும் ஒரு கண்மூடி மறுகண்திறந்து அயல்வரும் பேதை மடவாள் ஒருத்தியைப் பார்க்க முயன்றாயாக, அச் செய்தி கண்டவள் சிரித்த சிரிப்பூடே நீயும் நாணத்தால் கலந்துகொண்டு, நிகழ்ந்ததைமறைத்தற்கு ஓர்நிபமாய்க், கூவாது ஓர் சண்பகக் கிளையில் ஒதுங்கிய குயிலைக் குறித்து, 'மனக்கினிய மா......மங்காய், இந்நிலவில் அக்குயிலும் கூவினால் நமக்கின்பம் நல்காதோ' என்று கூறியுள்ளாயே, அந்நாளும் நங்கையும் இன்றுன் நினைவில் இருக்குமாயின், என் ஆருயிரே, வாய்தான் திறவாயோ!" என்று இயம்பிக் கூந்தலும் உணர்வும் மெய்யும் குழைந்து நின்றாள் மாதவி. சித்ராங்கனது நினைவில் அவளது உரையைத் தொடர்ந்தே இந்நினைவு எழ எழ, இருளாழ்ந்த அக்குழியும் மதிபொழி நிழலிற் குளித்தவோர் நந்தவனமாய் மாறிற்று. அதற்கிடை மாதவியின் மென்மொழியும் அன்று கூவாதுறங்கிய குயிலும் இன்று கூவியது போல இன்பம் அளிக்க அவன், "நங்காய், நீ யாராயினும் ஆகுக. மற்று, எனதுள்ளத் தமர்ந்த அணங்கின் நினைவோடு நீ நஞ்சையே புகட்டினும் எனக்கது நன்மருந்தாகும்—வாய் திறந்தேன்," என்றனன்.

T. N. சேஷாசலம்.

சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

பொருள் ஆராய்ச்சி.

[570-ம் பக்கத் தொடர்ச்சி.]

கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை.

உண்மையில் உற்றுநோக்கு மிடத்து இவை எல்லாம் இமைப்பொழுதிலேயே மாறிய நிலையாகக் காணப்படவில்லை. சிறிது சிறிதாகத் திரிபடைந்து முடிவில் முழுதும் மாறியனவாகவே தோன்றுகின்றன. மனவெளியின் எல்லைப்புறத்தே நம்மையும் அறியாமல் பல தோற்றங்கள் நிழலாகப் படர்ந்து பரவி பசுமரத்தாணி போல அப்படியே பதிந்துகொண்டே போகின்றன. அவை ஒரே தொடர்ச்சியாகப் பதிந்துகொண்டு வருகையில் அளவுகடந்து மிகுதிபட்டால் அவை வெள்ளமாய்ப் பெருக்கெடுத்து எல்லைப்புறத்து அணையை உடைத்து எறிந்து உள்ளே புகுந்து நமது மனதின் நடுவே பாய்ந்து முழுதும் நிரப்பி நமது உயிர் நிலையாகிய வாழ்க்கையை அடியோடு மாற்றி விடுகின்றன. இவ்வாறுதானே எரிமலையும் பொங்கி எரிந்து வழிகிறது. அல்லது யாதேனும் ஒரு நிகழ்ச்சியினால் மனம் கொந்தளிப்படைந்து கீழ்மேலாய் மாறுகையில் வெளியில் இருந்தவை உள்ளே புகுந்து விடுகின்றன. அருணகிரி நாதரும் வில்லமாதரும் பாடி விளையாடி வருகையில் அப்போதைக் கப்போது அவர்களது கீழான நிலைமை எல்லாம் அவரையும் அறியாது அவரது மனதிலே அமிழ்ந்து பதிந்தன. ஆனால் உயிர்நிலையாய் உள்ளிருந்தது விருப்பு நிலையாதலின் அவர்களைப் பழிக்கும் வெறுப்பு நிலை,வெளியே காத்துக் கொண்டிருந்தது. கல்லான மனதையும் கரைக்கவல்ல தமக்கையாரது தன்னந்தனிநிலை மனதில் தாக்கியபோது இவர் மனதில் ஒரு புயற்காற்றடிக்க நிலைகலங்கி உள்ளேயிருந்த விருப்புநிலை வெளியே ஓட, வெளியே நின்ற வெறுப்புநிலை உள்ளே புகுந்து உயிர் நிலையாய் விட்டது.

எல்லோர்க்கும்மனநிலை மாறுபாடும்,வாழ்க்கை மாறுபாடும் பண்புமாறுபாடும் கொள்கை மாறுபாடும் உண்டாவது பொதுவாகப் பதினாறுவது ஆண்டில் தான் என்று கற்றறிந்தோர் கண்டுள்ளார்கள். அந்தப் பதினாறு வந்ததும் முன்னர்க்கண்டபடி பேசித்திரிந்தவன் கூசி அடங்குகின்றான். குழறி வழிந்தவன் கூர்ந்தெண்ணிப் பேசுகின்றான்.நடையுடைகளைத் திருத்திக்கொள்வதில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றான். பெண்ணென்றும் ஆணென்றும் அறியாது பெண்கள் மடியில் ஆடிப்பாடித் தூங்கி எழுந்தவன் இப்பொழுது பெண்களுக்கிடையே தலை குனிந்து மருளமருள விழிக்கின்றான். உடல் உரம்பெற்று வளர்வது கண்டு தன்வலியைத் தானே தனக்குள் மெச்சி மகிழ்கின்றான். அதற்கும் இதற்கும் அழுதுவந்ததை அடியோடு மறந்து விட்டான். மன முடைந்து போகும்படி வருத்தம் வரினும் கண்ணீர் விட்டுக்கதற மனங்கூசி, உள்ளுக்குள்ளே புதைத்து வைத்துப் பொறுத்துக் கொள்கின்றான். தன்னை, மற்றைய இளஞ் சிறுவரினும் உயர்வாக எண்ணி நடக்கின்றான். இவ்வாறு உலகமும் உடலும் மாறிவரும்போது காலமாறியதற் கேற்பக் கோலம் மாறாததால் வருத்தப்படுகின்றான். பிறகு கடவுளை நம்பி உறுதியாய்ப் பிடித்து அமைதி நிலைபெற்று ஆறுதல் அடைகின்றான். அல்லது காதலியே ஊன்றுகோல் எனக் கடைபிடித்துக் கைப்பிடிக்கின்றான்; காலும் பிடிக்கின்றான். இவ்வாறு மனமாறி வருவதற்கும் முன்னர் நாம் கூறிவந்தபடி மனமாறுவதற்கும் ஒற்றுமையுண்டென்பர் ஜேம்ஸ் முதலிய மேல்நாட்டு அறிஞர்கள் (Varieties of Religious Experience.) மனம் மாறி உலகிற் சிறந்த பெரியோர் இளமையில்தான் மனமாறப் பெற்றார்கள் என்றும் எடுத்துக் காட்டுவர். அதனாலன்றோ தமிழர் மனக்கடலில் பன்முறையும் புயற்காற்றடித்த லாகாது; தம்முணர்வற்று அன்பில் ஆழவேண்டும் என்று ஆண்டின் அளவைப் பதினாறென வரையறுத் துள்ளார்கள்.

மன மாறுதல் எல்லாம் இவ்வாறே நடக்கின்றன என்பதில்லை. வெளியே அரும்புவிட்டுக் காய்த்துப் பழுத்து உள்ளே நடுவில்போய் விழுகின்றன என்பது எல்லாவிடத்தும் இல்லை. சில இடங்களில் முன் எவ்வகையாலும் மனதில் பதியாதனவும் உட்புகுந்து உடனே மனதை மாற்றி விடுகின்றன. முற்பிறவியில் பதிந்தவை என்பது ஒரு கொள்கை. பிறவி என்பதொன்று உண்டென ஒப்புவோமானால் இப்பிறப்பில் பதிந்தவை திடீர் எனத்தாக்கி மனநிலையை மாற்றுகின்ற தென்பதை ஒப்புவதோடு முற்பிறப்பில் பதிந்தவையும் அவ்வாறே செய்கின்றன என்பதையும் ஒப்புதல் வேண்டும்.

கண்ணப்பரும் தன்னுணர் வற்றபோது மனம் முற்றும் மாறிநின்றார். முற்பிறப்பின் உணர்ச்சி வந்ததென்றேனும் சொல்லுக; திருவருள் கூட்டி வைத்ததென்றேனும்சொல்லுக. தன்னுணர் வழிதல் என்பதை முன்னரே விரித்துரைத்தோம். அது,தான்எனும் முனைப்பற்று விழிப்பு நிலையில்வெளித்தோன்றும் பனிக்கற்பாறையாம் மனநிலைமுற்றும் கரைந்துஒன்றாகி மனக்கடலில் கலந்துவிடஇயற்கையோடு ஒன்றுபட்டுத் திருவருட் பெருக்காய்ப் பொங்கி வழிந்து இறைவனாகிய காற்று எங்கே அடித்துக்கொண்டு போகிறதோ அங்கே தன் செயலற்றுப்போய் அன்புருவாய் இறைவனேயாய் இன்பமடையில் பாய்தலாம். இந்த மன மாறுதலில் மனம் முழுமனமேயாகிறது. சிற்றறிவு பேறிவாகின்றது. கடவுளும் கண்ணப்பரும் முன்னரே ஒன்றுபட்டிருந்த நிலை இப்போது வெளியாகின்றது. ஒருவரை ஒருவர் கண்டதும் பழைய நிலை வெளிப்படுகின்றது. தன்னுணர்வழிதல் எப்போது எதனால் ஆகின்றது என்பதைப்பற்றி நக்கீரர் நவிலும் மொழிகள் சுவையும் அறிவும் நிரம்பியனவாகும். அதனை அன்பர் படித்து அகமகிழ்வார்கள்.

ஆகவே தன்னுணர்வல்லராதல் என்றால் தன்னுடைய பழைய பண்புகள் மாறுதல் என்க. கண்ணப்பர் கடவுளது காளத்திமலையைக் கண்டதும் பழைய நிலைமுற்றும் மாறி நின்றார். கண்டதும் காதல், என்பதே உண்மை. இயற்கையில் இருவர்க்கு முன்ள ஒற்றுமையானது ஒருவரை ஒருவர் கண்டஅளவில் வெளிப்பட்டு இருவரையும் ஒன்றாகப் பிணித்து விடுகின்றது. அவ்வாறு பிணிக்காது போமாயின் பின்னரும் பிணிப்பதில்லையாம். "Who loved that loved not at first sight" என்றார் மார்லோ என்ற ஆங்கிலப் பாவாணர், அதனைப் பொன்னேபோலப் போற்றி எடுத்தாண்டார் ஷேக்ஸ்பியர் என்பாரும்.

கண்ணப்பர் எவ்வாறு தன்னுணர்வல்லர் ஆயினார்? தண்ணீர் குடிக்கப் பொன்முகரிக் கரைக்கு நாணனோடும் காடனோடும் போயினார். எதிரே திருமலையைக்கண்டார். நாணனும் அந்த மலையில் உள்ள குடுமித்தேவர் கும்பிடத்

தக்கார் என்றான். கண்ணப்பரது மனக்கடலிலே பெரியதொரு புயற்காற்றுக் கிளம்பியது. காளத்தி மலையைக் கண்டதும் காதல் கொண்டார். காந்தத்தின் முன் காந்தத்தை வைத்தால் ஒன்றையொன்று இழுக்கின்றது. அதுபோலக்கண்ணப்பரைக் காளத்தியார் இழுத்துக் கொண்டார். ஏதோ ஓர் தூக்க முடியாத பெருஞ் சுமையைத் தூக்கித் தூக்கி உடலெல்லாம் குன்றிக்களைத்து இளைத்தவன் அப்பெருஞ் சுமையை இறக்கிவைத்தால் என்ன ஆறுதல் பெற்று இன்பந் துய்ப்பானோ அவ்வண்ணமே கண்ணப்பரும் இன்பந் துய்த்தார். முன்னிருந்த மனத்துயரம் எல்லாம் எங்கோ மறைந் தோடின. பெரியதோர் ஆறுதல் உள்ளத்தே ஊறியது. இதுவரையில் தான் நினைத்துமிராத விருப்பம் மனதில் பொங்கி வழிந்தது. ஈதென்னே என்று கண்ணப்பரும் மருட்கை (ஆச்சரியம்) கொண்டார்.

ஆவதென் இதனைக் கண்டிங்
கணைதொறும் மென்மேற் பாரம்
போவதொன் றனது போலும்
ஆசையும் பொங்கி மேன்மேன்
மேவிய நெஞ்சம் வேறோர்
விருப்புற விரையா நிற்கும்
தேவாங் கிருப்ப தெங்கே
போகென்றார் திண்ண னார்தாம்.

நாணனும் இவரை உடன்கொண்டு மேலேசென்றான். முன்பு செய்த தவத்தின் பயனாலே அன்புமேலே கிளம்பிற்று. எத்தகைய அன்பு? அஃது முடிவுஇல்லாத இன்பமான அன்பு. இறைவன் மேலோடிய பற்றுள்ளத்தோடு பரபரப்புடன் போயினார். கடவுளிடத்துக் காதல் பெருகி ஓடியது. என்பும் நீராய் வழிவதுபோல அடங்கி ஒடுங்கி மனங்கசிந்து இறைவனை எண்ணி உருகிநின்றார். இவருக்கு இறைவனார் இன்றியமையாதவராகப் போய்விட்டார். அவரைப் பிரிந்திருக்க இவரால் முடியவில்லை. இவரது அன்பு இவருக்கு முன்னாகவே ஓடிற்று. ஞான நிலை எல்லாம் கடந்து அப்பாலுக்கப்பாலாய்நின்றஅரும்பெரும் நிலையை அடைந்தார். கடவுளும் திருவருணோக்கம் வைத்தார். பழைய தொடர்பெல்லாம் பட்டென அறுந்தொழிந்தன. இறைவனது ஒளிப்பிழம்பில் ஒன்று கலந்து அன்புப் பிழம்பாய்விட்டார்-

முன்புசெய் தவத்தின் ஈட்டம்
முடிவிலா இன்ப மான
அன்பினை எடுத்துக் காட்ட
அளவிலா ஆர்வம் பொங்கி
மன்பெருங் காதல் கூர
வள்ளலார் மலையை நோக்கி
என்புநெக் குருகி உள்ளத்
தெழுபெரு வேட்கை யோடும்
நாணனும் அன்பும் முன்பு
நளிர்வரை ஏறத் தாமும்
பேணுதத் துவங்கள் என்னும்
பெருகுசோ பானம் ஏறி
ஆணையாம் சிவத்தைச் சார
அணைபவர் போல ஐயர்
நீணிலை மலையை ஏறி
நேர்படச் செல்லும் போதில்
திங்கள்சேர் சடையார் தம்மைச்
சென்றவர் காணு முன்னே
அங்கணர் கருணை கூர்ந்த அருட்டிரு
நோக்கம் எய்தித்
தங்கிய பவத்தின் முன்னைச்
சார்புவிட் டகல நீங்கிப்
பொங்கிய ஒளியின் நீழற்
பொருவிலன் புருவ மானார்.

பின்னர் உலகிற்கொரு தனிமுதல்வனைக் கண்டார். அவ்வளவுதான். இவரது இன்ப அன்பு இவரை இழுத்துக்கொண்டோடிற்று. தலைவனை விரைந்துபோய்த் தழுவிக்கொண்டார். உச்சிமோந்தார். வேறொன்றும் கண்ணுக்குப் புலனாகவில்லை. கண்மூடிக் கடவுள்மேல் காதல்கொண்டார். பரபரப்பினாலும் பரிவினாலும் மூச்சும்விட முடியாதபடி அன்பு ஓங்கி எழுந்தது. சிறிது நின்று காற்று வாங்கினார். உடம்பெல்லாம் மயிர்க்கூச்செறிந்து, கண்ணில் கண்ணீர் கலங்க நின்றார். "இவர் எனக்கு அகப்பட்டாரே" என்று களித்தார். மேலேபேச்செழாது நின்று " அச்சோ! அச்சோ " எனக் கூத்தாடினார். அந்த நிலையில் நின்ற கண்ணப்பரிடத்தில் அன்பின் உருவத்தைக் கண்ணாரக் காணலாம். கடவுள் தனித்திருப்பதைக் கண்டார் கண்ணப்பர் " ஐயோ காடி புலி நடுவே தனியே இருக்கின்றீரே" என்று இரங்கினார்.

மாகமார் திருக்கா ளத்தி மலையெழு
கொழுந்தா யுள்ள
ஏகநா யகனைக் கண்டார்
எழுந்தபேர் உவகை அன்பின்
வேகமா னதுமேற் செல்ல
மிக்கதோர் விரைவி னோடும்
மோகமாய் ஓடிச் சென்றார்
தழுவினார் மோந்து நின்றார்
நெடிதுபோ துயிர்த்து நின்று
நிறைந்தெழு மயிர்க்கா றோறும்
வடிவெலாம் புளகம் பொங்க
மலர்க்கண்ணீர் அருவி பாய
அடியனேற் கிவர்தா மிங்கே
அகப்பட்டார் அச்சோ என்று
படியிலாப் பரிவு தானோர்
படிவமாம் பரிசு தோன்ற,

என்று சேக்கிழார் தேனினும் இனிக்கப் பாடுகின்றார்.

முன்புநின் றரிதின் நீங்கி மொய்வரை
இழிந்து நாணன்
பின்புவந் தணைய முன்னைப்
பிறதுறை வேட்கை நீங்கி
அன்புகொண் டுய்ப்பச் செல்லும்
அவர்திரு முகரி ஆற்றின்
பொன்புனை கரையி லேறிப்
புதுமலர்க் காவிற் புக்கார்.

எனக் கண்ணப்பர் தம்மை மறந்தநிலையைப் புகழ்கின்றார் சேக்கிழார். தம்மையும் மறந்தார். உலகையும் மறந்தார். மரப்பொந்தைக்கவ்விய உடும்புஆனது தன்னைஎவர் என்னவலித்து இழுத்தாலும் கவ்விய கவ்வலை விடாதது போலக் கண்ணப்பனாரும் கடவுளை உடும்புப்பிடியாகப் பிடித்துக்கொண்டார். நாணன் இதைக்கண்டு கடவுள் மருள்வந்து விட்டதோ என எண்ணினான்,

அங்கிவன் மலையிற் றேவர் தம்மைக்கண்
டணைத்துக் கொண்டு
வங்கினைப் பற்றிப் போகா
வல்லுடும் பென்ன நீங்கான்
இங்குமத் தேவர் தின்ன
இறைச்சிகொண் டேகப் போந்தான்
நங்குலத் தலைமை விட்டான்
நலப்பட்டான் தேவர்க் கென்றார்.

உடன்வந்தகாடன் இதைக்கேட்டு "திண்ணனாரே என்ன இது! இப்படியும் இருக்கலாமா? நீ எங்கள் அரசன் அல்லவா? எங்களைக் காப்பாற்றவேண்டிய நீ இவ்வாறு வேறு போக்காய் இருக்கலாமா?" என்று வேண்டி நின்றான். ஆனால் கண்ணப்பர் காதில் ஈதொன்றும் விழவில்லை. அவர்களை இவர்திரும்பியும் பார்க்கவில்லை. இறைச்சியைச் சுடுவதும், சுட்டதைச் சுவை பார்ப்பதுமாய் இருந்தார். "இவன் என்ன பித்துப் பிடித்தவன்போலநடக்கின்றான். பெரும்பசியாய் இருந்தான், அதனையும் மறந்தான். ஒருபேச்சும் பேசுகின்றானில்லை. அவனருளால் வாழ அவனை நம்பிவந்த நாம் அழிபசியால் வாடுவதை அறிந்தும் நம்மைப்பற்றிச் சிறிதும் அவனுக்கு எண்ணம் காணோம்." என்று காடனும் நாணனும் அவரது மாறிய நிலைக்கு வருந்தித் தமக்குள் பேசிக் கொண்டார்கள். தம்முணர்வற்று நின்ற அவரது தகுதிகண்டு தேவராட்டியை அழைத்துவரப் போயினார்கள். ஆனால் அவர்கள் போனதும் இவருக்குத் தெரியாது. தம் வேலையில் கண்ணும் கருத்துமாக இருந்தார். போனவர்கள் தேவராட்டியையும் அரசனையும் உடன் கொண்டுவந்தனர். ஏதெல்லாமோ முயன்றார்கள். பித்து மாறியபாடில்லை. கைவிட்டுவிட்டார்கள்.

என்செய்தாய் திண்ணா நீதான்
என்னமால் கொண்டாய் எங்கள்
முன்பெரு முதலி யல்லை
யோஎன முகத்தை நோக்கார்
வன்பெரும் பன்றி தன்னை
எரியினில் வதக்கி மிக்க
இன்புறு தசைகள் வெவ்வே
றம்பினால் ஈர்ந்து கொண்டு
மருங்குநின் றவர்கள் பின்னும் மயன்மிக
முதிர்ந்தான் என்னே
அரும்பெறல் இறைச்சி காய்ச்சி
அதுக்கிவே றமிழா நின்றான்
பெரும்பசி உடைய னேனும்
பேச்சிலன் எமக்கும் பேறு
தரும்பரி சனரான் மற்றைத்
தசைபுறத் தெறியா நின்றான்
தேவுமால் கொண்டான் இந்தத்
திண்ணன்மற் றிதனைத் தீர்க்க
லாவதொன் றறியோம்
தேவராட்டியை நாக னோடு
மேவினாங் கொணர்ந்து தீர்க்க
வேண்டுமவ் வேட்டைக்கானில்
ஏவலாட் களையுங்கொண்டு
போதுமென் றெண்ணிப் போயினார்

"கானவர் போனதோரார்"

நாணனொடு காடனும்போய்
நாகனுக்குச் சொல்லியபின்
ஊணுமுறக் கமுமின்றி
அணங்குறைவாளையுங் கொண்டு
பேணுமகனார் தம்பால்
வந்தெல்லாம் பேதித்துக்
காணுநெறி தங்கள்குறி
வாராமற் கைவிட்டார்
முன்புதிருக் காளத்தி
முதல்வனாருணோக் கால்
இன்புறு வேதகத்திரும்பு
பொன்னானாற் போல்யாக்கை
தன்பரிசும் வினைஇரண்டும்
சாருமல மூன்றுமற
அன்பு பிழம்பாய்த் திரிவார்
அவர்கருத்தின் அளவினரோ

இரும்பு பொன்னானாற்போல முன்னிருந்த கொலையுருவாம் செல்வத்திற் சிறந்த வேடர் நிலைமாறி ஒரு பற்றுமிலாத அன்புருவாம் இறைவனிலை அடைந்த அவரும் முன்னைய நிலைக்குத் திரும்புவாரா என்கின்றார் சேக்கிழார். அவர் நிலைமாறியதற்கு நல்லதோர் உவமை கூறி விளக்கினார் நம் தெய்வப் புலவர். மேல்நாம் என்ன கூறுவது.

பின்னும் சிவகோசரியாருக்கு எடுத்துரைக்கும் வகையாகச் சிவபெருமானே கண்ணப்பரது உயரிய தம்முணர்வற்ற நிலையைப் புகழ்வாரானால் அதனிலும் உயரியநிலை வேறொன்று உண்டோ?

அவனுடைய வடிவெல்லாம்
நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம்
நமையறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம்
நமக்கினிய வாமென்றும்
அவனுடைய நிலைஇவ்வா
றறிநீஎன் றருள்செய்வார்.

கண்ணப்பர் தம்முணர்வற்று நின்றதைப்பற்றிக் கூறினோம். கடவுளும் தம்முணர்வற்று நின்றதையும் சேக்கிழார் கூறுகின்றார். இறைமைக் குணங்களின் நீங்கி இறைச்சியை இனிதென உண்டார். எச்சிலை நச்சினார். செருப்படியில் விருப்புடையாராயினார். ஆகவே,கடவுளும் முன்னின்ற நிலையின்நின்று மாறிவிட்டார் என்று சொல்லலாம். கண்ணப்பர் மலையைக் கண்டபோதே கடவுளின் அருணோக்கமும் கண்ணப்பர்மீது பட்டதை முன்னமே குறித்தோம். இங்கேயும் கண்டதும் காதல் கொண்டதைக் காண்கின்றோம். 'கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள் என்னபயனும் இல' என்ற குறளின் உண்மைப்பொருளை இங்கும் அறிகின்றோம்.

T. P. மீனாக்ஷிசுந்தரன்.

தமிழ்ப் பாடம் 30.

நள வெண்பா

(572-வது பக்கத் தொடர்ச்சி)

கலிதொடர் காண்டம்.

கீழ்வரும் மூன்று செய்யுள்கள் நீராடும் மாதரை வருணிக்கின்றன.

சிறக்கின்ற வாண்முகமுஞ் செங்காந்தட் கையான்
முறுக்குநெடு மூரிக் குழலுங்—குறிக்கிற்
கரும்பாம்பு வெண்மதியைக் கைக்கொண்ட காட்சி
யரும்பாம் பணைமுலையா யாம். 14.

சோர்புனலின் மூழ்கி யெழுவாள் சுடர்நுதன்மேல்
வார்குழலை நீக்கி வருந்தோற்றம்—பாராய்
விரைகொண் டெழுந்தபிறை மேகத் திடையே
புரைகின்ற தென்னலாம் பொற்பு. 15.

செழுநீல நோக்கெறிப்பச் செங்குவளை கொய்வாண்
முழுநீல மென்றயிர்த்து முன்னர்க்—கழுநீரைக்
கொய்யாது போவாளைக் கோல்வளைக்குக் காட்டினான்
வையாரும் வேற்றடக்கை மன். 16.

இதன்பின்வரும் செய்யுள்நளனும் தமயந்தியும் நீராடி உவந்ததைச் சொல்கின்றது.

காவி பொருநெடுங்கட் காதலியுங் காதலனும்
வாவியு மாறுங் குடைந்தாடித்—தேவிற்
கழியாத சிந்தையுடன் கங்கைநதி யாடி
யொழியா துறைந்தா ருவந்து. 17.

இனிவரும் ஐந்து செய்யுள்கள் நளனிடத்தில் தமயந்தி ஊடல் கொள்வதையும் அதை அவன் தணிப்பதையும் வருணிக்கின்றன. தனது ஆசையெல்லாம் நாயகன் மீது வைத்திருக்கின்ற ஓர் மனைவி, அவ்வாறே தன் நாயகன் ஆசை அவ்வளவிற்கும் தானே பாத்திரமாகவேண்டுமென்றுஎதிர்பார்ப்பது இயற்கையே. ஆதலால் தன்னை அல்லாது அயலில் வேறுஒருத்தியிடத்தில் தன்நாயகனின் கருத்துச் சிறிது நாடியதென்று இவள் நினைத்தாலும் பொறாள். அவனுக்கு வேறொருத்தியினிடத்தும் காதலில்லை என்று தேரும் பொருட்டு இவள் எப்பொழுதும், அவன் சொல்லெல்லாம், பார்வையாவும் செய்கைகளையும் ஆராய்ந்த வண்ணமாயிருக்கவே, அவை மயிரிழை தன்பால் அன்பிற் குறைவினாலேனும் எள்ளளவு இன்னொருத்திபால் அன்பினாலேனும் நேர்ந்தனவெனும் சந்தேகம் பிறக்க வழியுண்டானால் அதைப் பிறப்பித்துக் கொண்டு, இன்பமோடு தன்னிடம் குலாவிவரும் நாயகனை 'அண்டேல்' என விலக்கித் தனித்தகன்று போய்விடுதலே இவ்வூடலின் காரணமும் செய்கையுமாகும். காரணமென்று அவள் கருதுவதும் அற்பம். அதற்கவள் படுத்தும் அர்த்தமும் விபரீதம். சந்தேகம் ஒன்று யாதொரு நிபமும் இல்லாமலேகூட ஏற்பட்டால் அச்சந்தேகத்தை ஸ்தாபித்துக் கொள்வதற்கு வேண்டிய ஆதாரங்களை வலிந்தேனும் தேடிக்கொள்ள முயலுதல் மனதின் இயற்கை. நாயகனிடத்தில் இச்சந்தேகம் கொண்டு ஒழுகுதல் அவளுடைய அடங்காத ஆசைக்கு அறிகுறியே யல்லாமல் அற்பபுத்தியால் விளைவதல்ல. மணவாழ்க்கையில் இடை இடையே இவ்வித ஊடல் நிகழ்வது அவர்கள் கூடுந்தோறும் இன்பத்தை வளர்க்கின்றதெனக் கருதுவர். ஒவ்வொரு காவியத்திலும் ஊடல் வருணிக்கப்படும்.

நளனும் தமயந்தியும் பொழிலும் நீருமாடிக் களிப்புடைய மனத்தவராய் மகிழ்ந்திருக்கின்ற சமயத்தில் ஊடல் விளைகின்றது. உவகை மிகுதியாயிருக்கின்ற காலத்தில்தான் அதற்கு இடையூறும் நேர்வது உலக அநுபவமாதலால் அதற்கிணங்கியே கவிகள் தம் நூலில் ஊடலைத்தக்க இடம்பார்த்து அமைக்கின்றனர்.

நறையொழுக வண்டுறையு நன்னகர்வாய் நாங்க
ளுறையு மிளமரக்கா வொக்கு—மிறைவளைக்கைச்
சிற்றிடையாய் பேரல்குற் றேமொழியாய் மென்முறு
பொற்றொடியாய் மற்றிப் பொழில். [வற் 18.

பதப்பிரிவு:—நறை ஒழுக வண்டு உறையும் நல் நகர்வாய் நாங்கள் உறையும் இள மரம் கா ஒக்கும் இறை வளை கை சிறு இடையாய் பேர் அல்குல் தேன் மொழியாய் மென் முறுவல் பொன் தொடியாய் மற்று இ பொழில்.

அன்வயம்:—இறைவளைக்கை சிறு இடையாய், பேர் அல்குல் தேமொழியாய், மெல்முறுவல் பொன் தொடியாய், இப்பொழில், நல்நகர்வாய் நாங்கள் உறையும், நறை ஒழுக வண்டுஉறையும் இளமரக்கா ஒக்கும் (என்றான் நளன்)

பதவுரை

இறை - முன்கையில்
வளை - வளையல்களை அணிந்த
கை - கைகளையும்
சிறு - சிறிய
இடையாய் - இடுப்பையும் உடையவளே,
பேர் - பெரிய
அல்குல் - அல்குலையும்
தேன் - இனிய
மொழியாய் - சொற்களையும் உடையவளே,
மெல் - மிருதுவான
முறுவல் - சிரிப்பையும்
பொன் - பொன்னாற் செய்த
தொடியாய் - வளையல்களையும் அணிந்தவளே,
இ - (இங்குக் காண்கின்றதாகிய) இந்த
பொழில் - சோலையானது
நல் - நல்ல
நகர்வாய் - (மாவிந்த) நகரத்தில்
நாங்கள் - நாங்கள்
உறையும் - தங்குவதும்,
நறை - தேன்
ஒழுக - ஒழுகும்படி
வண்டு - வண்டுகள்
உறையும் - வசிப்பதும் ஆகிய
இள - இளமையான
மரம் - மரங்களுடைய
கா - சோலையை
ஒக்கும் - ஒத்திருக்கின்றது.

விரிவுரை:—இவர் செல்லும் வழியில் இருந்த ஒரு சோலையைக்காட்டித் "தமயந்தி, மாவிந்தநகரத்தில் நாங்கள் போய்த் தங்குகின்ற சோலையைப் போன்றிருக்கிறது இந்தச் சோலை" என்று சொன்னதுதான் நளன் செய்த பாவம். உடனே தமயந்தி ஊடல்கொண்டாள். நாங்கள் என்று இவன் தன்மைப் பன்மையை உபயோகித்ததால் அவளுக்குச் சந்தேகம் பிறந்து கோபமாய் வளர்ந்தது. 'தன்னையும் தன் காதல்மாதரையும் சேர்த்துச் சொல்கின்றான். எனவே, அவனுடைய காதலுக்குரிய மாதர்பலர் நகரில் இருத்தல்வேண்டும்' என ஊகித்தாள். நளன் யாரைக்கருதி 'நாங்கள்' என்றியம்பினானோ அறியோம். தன்பரிசனங்களைச் சேர்த்துச்சொன்னதா யிருக்கலாம்.

நறையொழுக வண்டுறையும் நன்னகர்வாய் நாங்கள் உறையும்.........என்று நளன் சொல்லிவருகையிலேயே கோபக்குறி தமயந்தியின் முகத்தில் தோன்றியிருத்தல் வேண்டும். அதைக்கண்டதும் மன்னவன், கெட்டது தன் குடி, எனப் பயந்து போயினான். 'ஓராமல் ஏதோ உரைத்துவிட்டேன்' எனும் அச்சம் துன்னென அவன் மனத்துள் புகுந்ததாற்றான், உடனே அவளைப் பலவாறு புகழ்ந்து சினத்தைத் தணிக்கப் புகந்தனன். அதனிலும் வார்த்தை தடுமாறுகின்றது. இறைவளைக்கைச் சிற்றிடையாய், என்பதைத் தொடரின்படி பார்த்தால் 'முன்கையில் வளையல் அணிந்த கைகளையுடைய இடுப்பை உடையவளே,' என்று ஆகி இடுப்போடு கை சேர்கின்றது. அவ்வாறே அல்குலுக்கு மொழியும் முறுவலுக்குத் தொடியும் சேரக்கூடியதாய்ச் சொற்றடர்கள் நடக்கின்றன. இது இவன் உற்ற கலக்கத்தால் வாய் விரைந்து சொற்களை அடுக்கும் செய்தி. (நாமிங்குப் பொருள் பொருந்துவதற்காக உம்மைத் தொகையாகக் கொண்டோம்).

ஊடிச்சினந்த தமயந்தி உரைப்பதை அடுத்த செய்யுள் கூறும்.

கன்னியர்தம் வேட்கையே போலுங் களிமழலை
தன்மணிவா யுள்ளே தடுமாற—மன்னவனே
இக்கடிகா நீங்க ளுறையு மிளமரக்கா
ஒக்குமதோ வென்றா ளுயிர்த்து. 19.

பதப்பிரிவு:—கன்னியர்தம் வேட்கையே போலும் களி மழலை தன் மணி வாய் உள்ளே தடுமாற மன்னவனே இ கடி கா நீங்கள் உறையும் இள மரம் கா ஒக்குமதோ என்றாள் உயிர்த்து.

அன்வயம்:—(உடனே தமயந்தி) உயிர்த்து, களி மழலை தன் மணிவாயுள்ளே தடுமாற, "மன்னவனே, இக்கடிகா நீங்கள் உறையும் இளமரக்கா ஒக்குமதோ" என்றாள்—(இப்படி அற்பத்திற் கெல்லாம் ஊடல் கொள்வது) கன்னியர்தம் வேட்கையே போலும்.

பதவுரை.

நளன் சொன்னது கேட்ட தமயந்தி,
உயிர்த்து - பெருமூச்சு விட்டு,
களி - கள்வெறி உற்றது போன்ற
மழலை - மழலைச் சொற்கள்
தன் - அவளுடைய
மணி - அழகிய
வாயுள்ளே - வாயினிற்குள்
தடுமாற - குழறும்படி,
"மன்னவனே - ஏ அரசனே,
இ - இந்த
கடி - வாசனை பொருந்திய
கா - சோலையானது
நீங்கள் - நீங்கள்
உறையும் - தங்குகின்ற
இள - இளமையான
மரம் - மரங்களையுடைய
கா - சோலையை
ஒக்குமதோ - ஒகோ ! ஒத்திருக்குமோ"
ஒன்றாள் - என்று கூறினாள்.
கன்னியர்தம் - மாதர்களுடைய
வேட்கையேபோலும் - ஆசை இதுதானோ !

விரிவுரை:—தமயந்தி கொண்ட கோபம் மிகவும் தரமானது. 'மன்னவனே' என்று அவள் நளனைக் கூப்பிட்டதைவிடச் சுடுசொல் வேறு இல்லை. 'நாயகன் அன்பன் காதலன்' என்பதெல்லாம் நேற்றோடு போயிற்று. இனி யாருக்கும் நீ அரசனாயிருப்பது போல் எனக்கும் அரசனேயன்றி, அதனின் நெருங்கிய உறவு நமக்கில்லை" என்று வெறுப்போடு புறக்கணிக்கின்ற பொருள் 'மன்னவனே' என்ற சொல்லிலும் அதைச் சொல்கின்ற குரலிலும் அமைந்திருக்கின்றது.

அதுவன்றி, "நாங்கள் உறையும் இளமரக்கா ஒக்கும்" என்ற நளன் சொன்ன சொற்களையே தமயந்தி எடுத்து, "நீங்கள் உறையும் இளமரக்கா ஒக்குமதோ" வென மீண்டும் அவன் முகத்தி லெறிதல் அவள் கோபத்தின் ஆழத்திற் கடையாளம். "நீ ஒரு காசிற்குப் பிரயோஜனம் இல்லாத கிழக் கழுதை" என்று ஒருவனை வைதால் அவன் கோபத்தினால், "நான் ஒரு காசிற்குப் பிரயோஜனம் இல்லாத கிழக் கழுதையோ," என்று அந்த வார்த்தைகளாலேயே கேட்பது யாவரும் அறிவர்.

"இவன் காதல் அடங்கலும் எனது என்று எண்ணியிருக்கப் பத்துப்பேரில் ஒருத்தி என ஆகவா என் கதி முடிந்தது" என்ற துன்பத்தின் குறி அவள் நெட்டுயிர்ப்பு விட்டது. 'மன்னவனே' என்றழைத்தது வெறுப்பு. வாயிற் சொல் குழறியது பேதுறவு (புத்திதடுமாறுதல்) எய்தியது. 'நீங்கள் உறையும் இளமரக்கா ஒக்குமதோ" என்று கூறியது கோபத்தால் வந்த வசை.

'கன்னியர்தம் வேட்கையே போலும்' என்பதற்குப் பல பொருள்கள் கூறலாம்:—

(1) "மாதர் பலரைத் தனக்கு ஆசைக்கிழத்தியராய் வைத்திருப்பதால்தான், 'நாங்கள்' என்று இவன் கூறினானே" எனத் தமயந்தி மனதில் எண்ணினவளாய், இவ்வாறு ஏசினாள், என்று கவி எடுத்துக் காட்டியதாகக் கொள்வது ஒன்று.

(2) அல்லது, "கன்னியர்தம் வேட்கையே போலும், இக்கடிகா நீங்கள் உறையும் இளமரக்கா ஒக்குமதோ" என்று தமயந்தி வாய்விட்டுச் சொன்னாளென்றும் கொள்ளலாம். "ஐய, யானொருத்தி போதாது உமது ஆசைக்குப் பலமாதர் இருக்கின்றனரோ......ஆதலாற்றான் உம்மை யறியாமலே, நாங்கள் என்று செப்ப நேர்ந்ததோ......உம் காவு இதனால் வெளியாயிற்றே..." என்ற பொருள் ஏற்றதாகும்.

(3) அல்லது, 'கன்னியர்தம் வேட்கையே போலும்' என்று பின் வருவதற்குப் பீடிகையாய்க் கவி சொல்லிக் கொண்டே ஆரம்பிப்பதாகக் கொள்ளலாம். இவ்வாறு கொண்டால், 'மாதர்களுடைய காதல் இப்படிப்பட்டது தானோ' என்று பொருள்படும். 'மாதருடைய காதல் இல்லாத இடத்திலும் ஒரு சந்தேகம் கற்பித்துக்கொண்டு வருந்தும்படி செய்யும் என்று சொல்வார்களே; அதற்கிணங்கத் தமயந்தியும் இங்கு இப்படிக் கோபித்தனள் போலும்,' என்று இதைக் கவியின் கூற்றாய்க் கொள்வதே அர்த்தச் சிறப்புடையதாவதுமன்றி இலக்கணத்திற்கும் இணங்கியதாகும். கன்னியர்தம், என்பது ஆறாம் வேற்றுமை, கிழமைப் பொருள். ஆதலால் கன்னியர்தம் வேட்கை, என்னும்போது கன்னியர்களுடைய ஆசை, என்று ஆசையை உடைத்தா யிருப்பவர் கன்னியர் எனக் கொள்வதே தகுதி. 'கன்னியர்தம் வேட்கை' என்றதற்கு நளன் 'கன்னியர்பால் வைத்த வேட்கை' என்று கொண்டாலன்றி முன்னிரண்டு பொருள்களும் பொருத்தமுடையன வாகா. அது ஏழாம் வேற்றுமையாகும். பொன்னாசை, என்றது பொன்னினுடைய

189013

ஆசை என ஆறும்வேற்றுமையைப்போல் வழக்கத்தில் விரிந்தாலும் ஆசையை உடைத்தாயிருப்பது பொன் அல்ல. 'பொன்னினிடத்தில் உள்ள ஆசை' என்ற ஏழாம் வேற்றுமையே அதற்கு ஏற்றது. எனவே, 'கன்னியர் தம் வேட்கை' என்றதில் தம் என்னும் சொல்லுருபு ஆறும் வேற்றுமைய தாகையால் கிழமைப்பொருள் உடையதாய், 'மாதர்பால் வைத்த ஆசையோ' என்று குறிக்காமல், 'மாதர்களினுடைய ஆசை, (அதாவது, மாதர் தம் நாயகர்பால் வைக்கின்ற ஆசை) இவ்வகைத்தோ'' என்பதைக் காட்டும்.

தொண்டைக் கனிவாய் துடிப்பச் சுடர்நுதன்மேல்
வெண்டாள மென்ன வியர்வரும்பக்—கெண்டைக்
கடைசிவப்ப நின்றான் கழல்மன்னர் வெள்ளைக்
குடைசிவப்ப நின்றான் கொடி. 20.

பதப்பிரிவு:—தொண்டை கனி வாய் துடிப்ப சுடர் நுதல்மேல் வெண் தாளம் என்ன வியர்வு அரும்ப கெண்டை கடை சிவப்ப நின்றான்கழல் மன்னர் வெள்ளை குடை சிவப்ப நின்றான் கொடி.

அன்வயம்:—கழல்மன்னர் வெள்ளைக்குடை சிவப்ப நின்றான் கொடி, தொண்டைக் கனிவாய் துடிப்பச் சுடர்நுதல்மேல் வெண்தாளம் என்ன வியர்வு அரும்ப கெண்டைக் கடை சிவப்ப, நின்றான்.

பதவுரை

கழல் - வீரகண்டையை அணிந்த
மன்னர் - (பகை) அரசர்களின்
வெள்ளை - வெண்மையான
குடை - குடைகள்
சிவப்ப - (போரிற்சாய்ந்து இரத்தம்பட்டு) சிவக்கும்படி
நின்றான் - வெற்றியுடன் நின்ற வீமராஜனது
கொடி - கொடிபோன்ற மகள்,
தொண்டை - கொவ்வைச்செடியின்
கனி - பழத்தைப் போன்ற
வாய் - உதடுகள்
துடிப்ப - துடிக்கவும்,
சுடர் - ஒளிபொருந்திய
நுதல்மேல் - நெற்றியின்மேல்
வெண் - வெண்மையான
தாளம் என்ன - முத்தைப்போல
வியர்வு - வேர்வைத்துளிகள்
அரும்ப - அரும்பவும்,
கெண்டை - சேல்மீனைப் போன்ற அவள் கண்களின்
கடை - கோடி
சிவப்ப - சிவக்கவும்
நின்றான் - (கோபத்தோடு) நின்றான்.

கருத்து:—பாராக்கிரமம் பொருந்திய வீமராஜனது புத்திரி மிகுந்த கோபத்தோடு நின்றாள்.

குறிப்பு:—(1) ஒருபொருளின் பெயர் அப்பொருளைக் குறிக்காமல் வேறொன்றைக் குறிக்க நேர்ந்தால் அப்பொழுது அது ஆகுபெயர் எனப்படும். இதன் இலக்கணத்தை முன் பாடங்களில் விரிவாகக் கூறியிருக்கின்றோம். ஒரு குணத்தின் பெயர் அந்தக் குணத்தை உடையவோர் பொருளைக் குறிக்குமானால் அது குணம் அல்லது பண்பு ஆகுபெயர். நீலம் என்ற நிறம் அந்தக் குணத்தைக் குறிக்காமல் அக்குணமாகிய நிறத்தை உடைய மலரைக் குறிக்கின்றபோது அது குண ஆகு பெயர். அவ்வாறே உவமை ஆகுபெயரும் இடஆகு பெயரும் வருகின்ற விதத்தைக் காட்டியுள்ளோம். இச்செய்யுளில், 'கெண்டக்கடை சிவப்ப' என்ற இடத்தில் சிவந்தது கெண்டை மீனின் கோடியன்று. சந்தர்ப்பத்திற்கிணங்கக் கெண்டை, என்ற மீனின் பெயரை அது எதற்கு உவமையாயிருக்கின்றதோ அப்பொருளாகிய கண்ணிற்கு ஆக்கிக் கொள்வதால், அது உவமை ஆகு பெயர். கொடி என்றதும் உவமையாகு பெயராய்த் தமயந்தியை உணர்த்தியது. இனி, முதல் ஆகு பெயர் என்ற ஆகு பெயரில் ஒருவிதம் இருக்கின்றது. முழுவதாகிய ஒன்றன் பெயர் அதன்பாகத்தைக் குறிக்குமாயின் அது முதலாகு பெயர் எனப்படும். வாய் என்பது, பல் உதடு நாக்கு ஆகிய இப்பாகங்கள் சேர்ந்து ஆனவொரு உறுப்பு. இங்கு'வாய் துடிப்ப' என்றதில் துடித்தது முதற்பெயராகிய வாய் அன்று. அதனின் ஒருபாகமாகிய உதடே துடித்தது ஆதலால் வாய் என்றது அதன் ஒரு பாகமாகிய உதட்டைக் குறித்தபடியால் முதல் ஆகு பெயர். அப்படியே, மோதிரத்தைக் கையிற் போட்டான், என்ற வழக்கில் கை என்பது முதலாகு பெயராய் விரலென்ற பொருளில் வருவதாகும்.

கம்ப ராமாயணம்.

பாலகாண்டம்

6 கையடைப் படலம்.

[574-ம் பக்கத் தொடர்ச்சி]

விஞ்சுவான் கெஞ்சுவான் புத்திர வாஞ்சையால்.

'செய்வதருளுக' என விநயமாய் வினவிய தயாதற்குக் கோசிகன், 'என் யாகத்தைக் காத்திட இராமனை அனுப்புவாய்' எனச் செப்பினன். உயிரைத் தாவென்று கேட்கும் எமனைப்போல்,

எண்ணிலா வருந்தவத்தோ னியம்பியசொல்
மருமத்தி னெறிவேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும்புழையிற் கனனுழைந்தா
லெனச்செவியிற் புகுத லோடும்
உண்ணிலா வியதுயரம் பிடித்துந்த
ஆருயிர்நின் றூச லாடக்
கண்ணிலான் பெற்றிழந்தா னெனவுழந்தான்
கடுந்துயரங் கால வேலான்.

மன்னவன் துயரிற்கிங்குக் கம்பர் கூறிய உவமையை மாற்றலரிது. பிரபஞ்சத்தின் வைபவத்தை ஒருபொழுதும் கண்டறியாப் பிறவிக் குருடனுக்குள்ள துன்பம் சிறியதே. ஏனெனில், கண்களில்லாததால் காண இயலாத காட்சி எத்தகைய தென்றேனும், அக்காட்சியின் இன்பமும் அவனறிந்தவனல்லன். அன்றியொருவன் சிறிதுநேரம் பார்வைபெற்று உலகத்தின் அழகை அநுபவிக்கின்ற செவ்வியினிடையே, மறுபடியும் கண்ணவிந்து போவானெனின் அப்பொழுதே அவனிழந்த நலத்தினளவை முழுவதும் உணர்ந்து அழுங்குவான். அறுபதினாயிர மாண்டு புத்திரனில்லாதது தயாதனுக்கு ஒரு குறையேயாய் நின்றது. அவன் புத்திரவுலகத்தின் இன்பத்தை இப்பொழுதே கண்டும் காணாததுமாயிருக்கின்ற சிறுகாலத்திற்குள் கண்ணின் மணியனைய மகனை இழக்க நேர்வதெனின் அவனுறுதற்குரிய வேதனை அன்றே பெரியதாகின்றது.

கண்ணிலான் பெற்றிழந்தான் எனஉழந்தான், என்று தயாதனின் நிலையைக் கம்பர் உரைக்கின்ற சொற்களில் உவமை நயம்மாத்திரமன்றி முன்நிகழ்ந்தவோர் சரித்திரக் குறிப்பும் அடங்கி இருக்கின்றது. கண்ணிலா முனிவன் சலபோசனின் ஒருமகன் சுரோசனனை வேழமென வெண்ணிய தயாதன் சப்தவேதி அத்திரத்தால் வதைத்தபோது புத்திரனை இழந்த அம்முனிவன் பரிதபித்த வண்ணம் இன்று இம்மன்னவன் கடுந்துயருழந்தான் என்னுங்கருத்து இங்குத் தொனிக்கக் கேட்கின்றோம். அன்று அவ்வந்தக வேதியன்,

" ஏவா மகவைப் பிரிந்தின் றெம்போ லிடருற்
றனைநீ போவாயகல்வான் "

என்று விதித்த சாபம் இன்று தயாதனின் நினைவிற்கு வருதலும் இயற்கையே. மகப்பேறு எய்தாது மாழ்கிய மனத்தனாய் இருந்த தயாதனுக்கு இச்சொற்கள் சாபமேயாயினும் அக்காலம் உவகையும் ஊக்கமுமே அளித்தன. "நினதுயிர் நீங்குகின்ற காலத்தில் உன்மகன் அயலில்லாது போகக்கடவது'' என்ற இச்சாபம் நிறைவேறவேண்டுமாயின் தனக்கொரு பிள்ளை பிறப்பது திண்ணமாவதால்,

"நிந்தை தளர்வுற் றயர்தல் சிறிது மிலனுயின் சொல்
மைந்த னுளனென் றதனால் "

மகிழ்வோடு பெறுவதற்குள பேற்றினை நினைந்தே உள்ளம் பூரித்தானென்றால் தயாதன் புத்திரற்கு எத்தனை அவாவினன் எனல் வேண்டுமோ. ஒன்றினைப் பெறுவதற்கு எய்திய இன்பத்திற்கு நேரான நிறையாகும் அதனை இழப்பதால் விளைகின்ற துன்பமும். ஆதலால், உவமையின் செம்மையாலும், சரித்திரத் தொடர்பினாலும், "கண்ணிலான் பெற்றிழந்தான் என உழந்தான் கடுந்துயரம்" என்பதல்லால் தயாதனின் துயரை அளப்பதற்குக் கம்பராலேயே வேறொன்று வகுத்துரைக்க இயலுமோ என்னும்படி அச்சொற்கள் அமைந்திருக்கின்றன.

இத்தகைய துன்பம் கடலளவு புரண்டபோதும் தயாதன் தன்னீர்மை துளியளவு குன்றாப் பெருமையனாகும்படி கம்பர் அவன் நிலைநிறுத்திய உதவிக்கு நிகரான கைம்மாறு தேடுதல் வறிதே. வான்மீக முனிவராலே அவன், வள்ளலார் அறத்திற்கும் நாகாக்கும் வாய்மைக்கும் புறத்தே செலும்படி நேர்ந்தது மல்லாமல், வீரத்தானும் பழுதுற,

"ஐயோ, அந்த இராவணனுக்கு எதிரில் நின்று நான் போர்செய்ய வல்லனல்லேன். என் சிறு குழந்தையிடம் நீர் மனமிரங்கவேண்டும்......... அவனே வீரர்களுக்குள் வீரனையும் ஒருகொடியில் வெல்ல வல்லவன். அவனுடனாவது, அவன் சைநியத்துடனாவது போர்செய்ய என்னால் முடியாது. முனிவரே, என் குழந்தைகளையோ அல்லது என் சைநியங்களையோ அழைத்துக்கொண்டு சென்றாலும் என்னசெய்ய முடியும்?......என் குழந்தையைக் கொடேன்.........சுந்தன், உபசுந்தன் என்றவர்களுடைய குமாரர்களன்றோ உமது யாகத்தைக் கெடுக்க எத்தனிக்கின்றவர்கள்; அவர்கள் யுத்தத்தில் யமன் போன்றவர்கள்..... நான் ஒருபொழுதும் என் பிள்ளையை அனுப்பமாட்டேன். ஆனால், அவ்விருவில் ஒருவனுடன் போர்புரிய நானும் என் சைநியமும் வருகின்றோம். அதற்கு நீர் எப்படியாவது இசைய வேண்டும். நான் இரந்து கேட்டுக் கொள்கின்றேன்.''

எனப் பகைவர்க்கஞ்சிப் போரிற்கேகாமுன்னம் புறகொடுத்தோடுகின்றான். இதனில் உரைத்தமொழி மாறியதும், ஈயாது மறுத்ததும், கோசிகன்பால் இரத்தலும், ஒன்னார் பேர்கேட்டு வீரம் உடைதலும் ஆகிய சிறுமைகள் நான்கு அவனை சூழ்ந்து கொள்கின்றன. அவ்விருவரில் ஒருவனுடன் போர்புரியத் தான் தன் சைநியத்தோடு வருவதாகச் செப்பியது. வேறுவிதி இல்லையே என்று அரைமனதோடு அழுதமொழிகளேயன்றி, வீரத்தாலும் வண்மையாலும் வாய்மையாலும் எழுந்தமொழி ஆகா.

கம்பரின்படியும் தயாதன் தான் வருவதாகச் சொல்கின்றான். ஆனால் வான்மீகத்தில் தொனிப்பதுபோல் போயங்குத் தோற்பதற்கன்று. தன் சைநியத்தைப் பற்றியும் ஒரு பேச்சு இங்கில்லை. 'தனுவன்றித் துணையில்லான் தருமத்தின் கவசத்தான்' என்று இவனைப் பெருமைப் படுத்துவதைக் கம்பர் மறந்திலராகையால் தயாதன் தன்படைகளின் உதவியைப் பாராட்டினனல்லன். இராமனைக் கேட்க அதற்கு மாறாகத் தானே வருகின்றே னென்பது சொல் மறுப்பேனும் கொடை மறுப்பேனும் ஆகாது. 'வேண்டியதைச்சொல்' என்றனே யன்றி முனிவனுக்கு 'வேண்டியதைத் தருகின்றேன்' என்றிவன் வாக்களித்ததில்லை. ஆதலால் வழங்கிய சொல் இழந்திலன். எழுத்தளவு வாக்குறுதி இல்லையெனினும் 'தருகின்றேன்' என்ற கருத்தே அவ்வாக்கியத்துள் அடங்கியிருக்கின்ற தென்று நினைத்தாலும், இப்பொழுது 'தரமாட்டேன்' என்ற சொல்லும் அவன் வாய் வந்திலது என்பதே தக்க சமாதானமாகும். விச்வாமித்திரன் கேட்பதெல்லாம் தன் யாகத்தை நிறைவேற்றி வைக்கவேண்டும் என்பதொன்றே. அதற்கு இராமன் ஏற்ற கருவி என்று அவன் மதித்தனன். வேண்டினர் வேட்கையின் மேற்படவீசி நீண்டகைத் தயாதனோ, யாக காரியம் நிறைவேறுதற்குப் படையூற்றமிலாச் சிறியன் இராமனினும் தானே தக்க கருவியாவா னென்ன உன்னி, " யான் காப்பன், பெரு வேள்விக்கு எழுக'' என்றான். தயாதன் தன் உரை கொடை வீரம் மூன்றும் காத்தவண்ணம் இவ்வண்ணம். இனி, இராமனின்றித் தானே வருமாறு முனிவன் பணித்தருள வேண்டுமெனும் கவற்சியினால் தயாதன் வரம்பழிந்த ஊக்கத்தனாய்,

" பனிநீர்க் கங்கை புடையூற்றுஞ் சடையானும்
நான்முகனும் புரந்தானும் புகுந்து செய்யும்
இடையூற்றிற் கிடையூறாய் யான் காப்பன் "

என ஓரளவு மிகைபட வீரம்பேசியதைப் பொறுத்தலுமரிதன்று. சிவனையும் அயனையும் இந்திரனையும் வெல்லத் தான் வல்லவன் எனும் இறுமாப்பினால் இவ்வாறு அறைகூவினானல்லன். தயாதன் காக்கின்ற வேள்வியைத் தடுக்க அத்தேவர் வாரார் என்னும் நிச்சயத்தால் அவன் இவ்வீரம் விளம்பினான் எனினும் பொருந்தும். தன்னின் திருமகனைக் குலகுருவாகக்கொண்ட தயாதற்கு எதிராகவோர் இடையூறுசெய்ய நான்முகன் நேர்ந்திடான். இவன் கொண்டளித்த வானுடாள்கின்ற இந்திரன் நன்றிகொன்று தயாதனுக்கு மாறாக இகல்கொள்ள நினையான். மாறுபட்டுவரினும் தோற்பவர் எவரென்பதும் அவனுக்குத் திண்ணமா யிருத்தல்வேண்டும். இனிக், கங்காதரக் கடவுள் என் இடையூறு செய்யப்புகான் என்று தயாதன் எண்ணினனென்றேனும், மற்றுப் புகுவானேல் தான் அதனைத் தடுக்கு மாற்றலுளனென்று எண்ணினனோ வென்றேனும் அறிகிலேம். முத்தேவரில் அரியைவிட்டு இந்திரனைச் சேர்த்துக் கொண்டதற்கு மாத்திரம் காரணம் ஊகிக்கலாம். "எக்

ஞேவை விஷ்ணு:" எனும் வாக்கியத்தின்படி தன்னையேகெடுத்துக் கொள்ளத் திருமால்வருவனென்று சொல்லளவிலேனும் இயம்புதல் தகாதென விடுத்தனன் போலும்.

தயாதனின் கருத்து எதுவாயினும் ஆதக.மகப்பற்றொருபுறமும் அறப்பற்றொருபுறமும் அவனைப் பிடித்தலைக்கின்றன. அறமும் வழுவாது மகனும் துறவாது காத்தற்கு இம்மறம் பேசினலன்றி இந்நிலையில் வேறு நெறியில்லை என்பது வெளிப்படை. எனினும் தயாதனின் வாழ்க்கைக்குள்ள கொள்கையில் மறம் பிரதானமன்று. அறமே பிரதானம். வடமொழிக் காவியத்தில் வந்த தயாதனைப்போல் புத்திரவாஞ்சையால் அறத்தைப்போக்கிலே போகவிட்டேனும் இராமனைக் காக்க எண்ணிலன். எண்ணுபவனுயின் கைகேசிக்கு அளித்த வரம் பிறழ்தல் அருமையாகா தென்பதை முன்னரே விளக்கியுள்ளோம். ஆனல் மறம் சிதைவதெனினும் சிந்தியாது இராமனைக் காக்க விரைவானென்பதைப் பரசுராமன் உருத்து வந்து உடன்றபோது காணலாம்.

மழுவின் சிகை புகையவும் கண்கள் கனலுமிழவும் விண் கீழ்விழவும் மண்மேலெழவும் சினத்தினுருவத்தனய் எதிர்ப்பட்ட பரசுராமன், இராகவனை நோக்கி

இற்றேடிய சிலையின்திற மறிவென்னினி யானுன்
பொற்றேன்வலி நிலைசோதனை புரிவானசை யுடையேன்
செற்றேடிய திரடோளுறு தினவுஞ் சிறிதுடையேன்
மற்றோர் பொருளிலையிங்கிதென் வரவென்றன னுரவோன்.

[நீ உடைத்த அவ்வில் முன்னரே உடைந்திருந்த செய்தியை யானறிவேன். இனி, உன் அழகிய தோளின் வலி உண்மையில் எவ்வளவு என்பதைச் சோதிக்க வேண்டும் எனும் ஆசையுடையவனு யிருக்கின்றேன். என் பகைவரை யெல்லாம் வென்றுவிட் டிருக்கின்ற எனது தோள்கள் போர்வேண்டிச் சிறிது அரிக்கின்றன. அதற்காகத்தான் இங்கு வந்தேன். வேறொன்று மன்று]

என்று தருக்குடன் கூறுமளவில், இவ்வந்தண வீரனிற்கு எதிர்நிற்கத் தன்னருந் தனையனலாற்றாதென மதித்த வேந்தன், அவனடியிற்றன் முடிபடப் பணிந்து,

" புவனம்முழு வதும்வென்றொரு
முனிவற்கருள் புரிவாய்
சிவனும்மய னரியும்மலர்
சிறுமானிடர் பொருளோ
இவனும்மென துயிரும்முன
தபயம்மினி யென்றான்"

[உலகமெல்லாம் வென்று காசிப முனிவனுக்குத் தானமாகக் கொடுத்த பெருமையுடையவனே, நாங்கள் சிவனும் அல்லர் பிரம்மனும் அல்லர் விட்டுணுவும் அல்லர். அற்பச் சிறு மானுடர்களாகிய நாங்கள் உனக்கு ஒரு பொருளா. இராமனும் என் உயிரும் இனி உனக்கு அடைக்கலம். காத்தருளவேண்டும்.]

என்று வேண்டினன். உற்றவிடத்தில் உயிர்வழங்குந் தன்மையனவனுயின் பற்றலரைக்கண்டு பணிந்து இராமனைக் காத்துத் தன்னுயிரையும் அளிக்குமாறு தொழுதிறைஞ்சிப் 'பொங்கத்தம் பொங்கோ' ஆடிவிடமாட்டான். அவனது ஆற்றலிற்கும் வீரத்திற்கும் புகழிற்கும் இது அழகன்று. எனினும் கங்கை புடையூற்றுஞ் சடையானும் நான்முகனும் புரந்தரனும் புகுந்துசெய்யும் இடையூற்றிற்கு இடையூறய்க் காப்பனெனக் கழறிய வாயேகொண்டு இங்குச் சிவனும் அயன் அரியும் அல்லாத சிறுமானுடராய்க் குழறிய தயாதன் இதனல் பெரியதோர் இழுக்குற்றானென்று எண்ணவேண்டா. அங்கு விச்வாமித்திரனிடத்தில் தன் வீரத்தின் மேம்பாட்டை விஞ்சப் பேசினலன்றித் தன் புதல்வன் தப்பும்வகை கண்டிலன். இங்குத்தன திழிவுசாற்றிக் கெஞ்சிப் பேசினலன்றித் தன்புதல்வன் தப்பும் வகைகண்டிலன். வீரமும் புகழும் பழுதுற நேர்ந்ததெனினும் புத்திரனைக் காத்தல் இவனுக்கு இன்றியமையாததாயிற்று.

தன் புகழ் பெருமை மானம் யாவற்றினும் மேலாக இராமனைக் கருதிக் காதலித்த தயாதன் அவனிலும் மேலாக வாய்மையைப் போற்றினனுகி, வாய்மையும் மரபுங்காத்து மன்னுயிர் துறந்த வள்ளல் தூயவனய்த் திகழுமாறு கவிக்கரசு கம்பர் அவனை ஆக்குவித்தார். நாடகமுறையின் சிறப்பியலிற்குத் தயாதனின் குணமும் செயலும் இணங்கி நடக்கின்ற நயம் இதனற் புலப்படுகின்றது.

தவத்திற்கு நிகரான கோபமும் வாய்ந்த முனிவன் யாது செய்தனன். சொன்ன சொல் தவறினனென்று மன்னனை இடித்துரைத்திலன். அதனல் நாடகத்தின் நயம் தடையுற்றிருக்கும். மற்று,

என்றனனென் றனுமுனிவோ டெழுந்தனன்மண்
படைத்தமுனி யிறுதிக்காலம்
அன்றெனவா மெனவிமையோ ரயிர்த்தனர்மேல்
வெயில்கரந்த தங்கு மிங்கும்
நின்றனவுந் திரிந்தனமீ நிவந்தகொழுங்
கடைப்புருவ நெற்றி மூற்றச்
சென்றனவந் தநுநகையுஞ் சிவந்தனகண்
ணிருண்டனபோய்த் திசைக ளெல்லாம்.

வெகுளிக்கோர் எல்லையும் வன்மையும் இதன்மேல் எங்குளது? இத்தகைய வெகுளிக்கு ஆளாகிநிற்கின்ற தயாதன் பரிவினேடும் தன்னருகிருந்த வசிட்டனை நோக்கியிருப்பான். வசிட்டனே கோசிகன்கொண்ட சீற்றத்தை ஒருபொருளாக மதித்திலன். அவனது ஆற்றலைத் தயாதனுக்கு எடுத்தோதி இராமனை அனுப்புவதே தருமமெனக் காட்டிலன்.

கறுத்த மாமுனி கருத்தை யுன்னிநீ
பொறுத்தி யென்றவற் புகன்று நின்மகற்
குறுத்த லாகலா வுறுதி யெய்துநாள்
மறுத்தி யோவெனு வசிட்டன் கூறினன்.

அவ்வளவே. ஆதியில் காமதேனுவைக் கேட்டதுமுதல் விச்வாமித்திரன், அரிச்சந்திரன்பொருட்டும் திரிசங்குவின்பொருட்டும் வசிட்டனேடு இகல்வதும், இகலுந்தோறும் அவ்விச்வாமித்திரனே தோற்பதும் நினைவிற் கொள்வோமாயின் 'நீ பொறுத்தி' என்று வசிட்டன் இன்று கையமர்த்தியதின் நாடகத்திறமும் நயமும் எளிதில் உணர வல்லவராவோம். "கானிங்கிருக்கு மளவும் நின்கோப மெல்லாம் தயாதனை யாதும் செய்யமாட்டாது. சும்மா இரும் முனிவரே" என வசிட்டன் மெல்லத் தகைகின்றதொனி, 'நீபொறுத்தி' என்ற அச்சிறு வாசகத்துடே குமுறுகின்றது. பின் தயாதனைப் பார்த்துக், "கோசிகனின் கோபத்திற் கஞ்சி யான் இராமனை அவனேடனுப்பச் சொல்லவில்லை. உன் மகனுக்கு ஒரு கெடுதியும் நேராத நல்லகாலம் இதனல் வருவதற்கிருக்கின்றது. அதையேன் மறுக்கின்றாய்" என்ற மட்டில் வசிட்டன் கூறுவது கதையின் நிகழ்ச்சிக்குப் போதுவதாயிற்று. இதன்மேல் இராமனை யனுப்பத் தயாதனிற்கு எவ்விதச் சங்கையு மில்லை. உள்ளந் தேறினன். உவகையும் எய்தினன்.

T. N. சேஷாசலம்.

அகத்திய முனிவர்.

(576-வது பக்கத் தொடர்ச்சி)

அகத்திய முனிவர் முதலிற் பாண்டிய வம்சத்திற்குக் குருவாக விருந்தாரென்று சின்னமனூர்ச் சாஸனத்தால் வெளியாகின்றது. அதில் சுந்தரபாண்டிய னென்பவன் இவருக்குச்சீடனுக விருந்தானென்றுங்கூறப்பட்டுள்ளது. திருவிளையாடற் புராணங் கூறினவர் முறையில் அகத்திய முனிவரும் ஒருவராவர். வச்சிராங்கதன் என்னும் ஓர் பாண்டியன் கம்போடியா தேசத்துக் குதிரையிலேறிக் கொண்டு பொதிகை மலையின்மேல் வளங்காணச் சென்றான். அக்குதிரை சென்றதால் அங்குள்ள அகத்திய முனிவரின் சிவலிங்கம் அசுத்தமாயிற்று. அதையறிந்த முனிவர் அவனையழைத்து அதற்குப் பரிகாரஞ் செய்யச் செய்தனரென்றோர் வரலாறு வழங்குகின்றது. தவிர;

" உலகம் திரியா ஓங்குயர் விழுச்சீர்ப்
பலர்புகழ் மூதூர் பண்புமேம் படீஇய
ஓங்குயர் மலயத்து அருந்தவன் உரைப்பத்
தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் "

காவிரிப்பூம் பட்டினத்து வளங்குறையாமல் மிகுதியாகும் பொருட்டு அப்பொழுதச் நகரத்தை யரசாண்டு வந்த சோழபரம்பரையனுன தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியனைக் கொண்டு இந்திரனுக்கோர் விழாச் செய்வித்தனர். அவனுமவ்வாறே செய்தான். சோழநாடுஞ் செழிப்புற்று யாதொரு தீமையுந் துன்பமுமின்றி மேலோங்கியது. பிறகொருசோழன் இவ்விழாவை நடத்த மறந்தான். அதனற் காவிரிப்பூம் பட்டினத்தைக் கடல் கொண்டுபோய் விட்டது. இங்ஙனமிவ்விரு நாடுகளுக்கும் வேண்டிய நன்மைசெய்து பிறகு சேரநாட்டில் அகத்திய கூடமென்னும் மலையில் வந்து வீற்றிருந்து அந்நாட்டாருக் காசி புரிந்துகொண் டிருப்பாராயினர். அங்கு அகத்திய முனிவருக்கோர் கோயிலும் விக்கிரகமும், அந்நாட்டிற்றனே அசம்புமலைக்குக் கீழ்ப்பக்கமிருக்கும் உலக்கருவி யென்னும் நீர் வீழ்ச்சிக்கருகில் ஓர் கோயிலு மிவருக்குண்டு. அம்மலைப் பக்கத்தாரார் இன்றும் அகத்தியமுனிவருக்கு விழாச்செய்து கொண்டாடி நலமடைந்து வருகின்றனர். மழையின்றியும், நீர் வீழ்ச்சியில் நீரின்றியும் விளைநிலங்கள் தத்தளிக்குமாயின் அகத்திய முனிவருக்கு விழா வெடுப்பார்கள். விழாச் செய்து முடிவடையுமுன் அகத்திய முனிவரருளால் நீர் வீழ்ச்சியில் தண்ணீர் வந்துவிடும். இன்னும் அந்நீர் வீழ்ச்சியினுற்பத்தியைக் காணுதலருமை யென்று கூறுகின்றனர். இதனல் வற்கட காலத்திலும் மழைவளஞ் சுரக்கச் செய்யுந் தன்மையுடையவ ரென்பதறியலாகின்றது. தவத்தாலாகாத தென்னே?

முன்னெரு காலத்தில் வேதத்திற் கூறும் அஜமேதமென்பதற்கு வடமொழியில் வல்லவர், அஜம்=ஆடு; என்று பொருள்கொண்டு, ஆட்டினுற் செய்யும் யாகமென்று துணிந்து வேள்வி செய்யத் தொடங்கினர். அதற்கு மாறுக அகத்திய முனிவர் உயிர்க்கொலை புரிந்து வேட்டல் தகாதென்றும், உயிர்களுக்கு நன்மைகளைச் சொல்கிறவேதத்திற்கூறும் அஜமென்பதற்கு "அஜைர்வ்ஷ்டவ்யம், தத்ர அஜா வ்ரீஹய:" அதாவது ஓர்வகை மூவாட்டை நெல்லென்றும், அதைக் கொண்டு செய்யும் வேள்விக்கு அஜமேதமென்றும் பொருள் கூறினர். அப்பொருளை யவர்கள் ஒப்புக்கொள்ள வில்லை. அதனல் முனிவர் பொதிகைமலையிலிருந்து பன்னிரண்டு வருஷம் யாகஞ் செய்தார். அதுகண்டு இந்திரன் முதலியோர் இஃதோர் புதுமை யென்றெண்ணி நிறைவடையாமல் அவியேலாது மழைவளத்தைத் தடுத்தனர். அஃதறிந்த அகத்திய முனிவர் தன் தவவலிமையால் மேகங்களுண்டுபண்ணிக் கடல் நீர்படிந்து மழைபொழியச் செய்ததுமன்றித் தேவர்களாற் குறைக்கப்பட்ட வளங்களையெல்லாம் ஒருங்கே யேற்படுத்தி உயிர்க ளின்புற வைத்தனர். பிறகு தானியத்தைக் கொண்டு நான்முகன் முதலியோர்க்கு அவியளிக்கஅதையு மவர்கள் ஏலாததையறிந்து முனிவர் சபிக்க வெண்ணுமளவில் அவர்களஞ்சி எதிர்வந்து வணங்கிடத்து பொறுக்க வேண்டினர். அனைவரும் ஒன்றுசேர்ந்து உயிர்க்கொலை வேள்வி புலைவினையாகாத அறவினையே யாயினுங் கடையாயவேள்வியே; அஃதல்லாத வேள்வி உத்தம வேள்வியாகுமென்று முனிவரிடங் கூறி முனிவையாற்றி விடைபெற்றுச் சென்றனர்.

இவ்வரலாறும் அகத்திய முனிவரின் தவவலிமையைப் புலப்படுத்துவதாயினும், தக்க சான்றுகளின்மையால் பிற்காலத்தாராற் கற்பிக்கப்பட்டதென ஐயமேற்படுகின்றது. வேதகாலங்களி லிங்ஙனமொத்த வரலாறுகள் (புலைமறுத்துக்கூறும் வரலாறுகள்) இருந்ததாகப் புலப்படவில்லை. சமணமதப்பற்றுப் பரவியபிறகு அவர் புலால் மறுத்தலை நிலைநாட்டுவதற்கு இங்ஙனங் கற்பித்தனரோ? அறியேம். எவ்வாறுயினும் இதுவன்று, இதற்குமேலும் பெருமையுள்ள அரிய கற்பனைகளைச் சேர்த்துக் கட்டிவைத்தாலும் பொறுக்குந் தகைமையுள்ளாரே யகத்தியமுனிவர். ஏனெனில் மேற்கூறிய வரலாற்றிற்கு முற்று மாறுக "அகத்தியமுனிவர் காட்டில் ஸத்ரயாகஞ் செய்யும் போது எல்லாத் தேவர்களையும் உத்தேசித்துக் காட்டிலுள்ள மிருகங்களனைத்தையும் நீர்தெளித்து வேட்டையாடிக் கொன்றா" ரென்று மகாபாரதத்திற் கூறப்பட்டுள்ளது.இவாது வரலாற்றுச் செயல்களை யிம்மட்டோடு நிறுத்திவிட்டு இவரியற்றிய நூலைக் கவனிப்போம்.

அகத்திய மென்னு மிலக்கண நூல் கடைச்சங்க காலம் வரையில் வழங்கிவந்ததெனக் கடைச்சங்க வரலாற்றிலிருந் தறியலாகின்றது. கடைச்சங்க காலத்திற்குப் பிறகு அகத்தியம் கற்பாரின்றிப் பழக்கங் குறைந்தழிந்து போயிற்று. நச்சினர்க்கினியர் அடியார்க்குநல்லார், பேராசிரியர், இளம்பூரணர் முதலியோர்கள் காலத்திற்கு மிகவும் முன்னமே அகத்திய மழிந்துபோயிற்று. இப்பொழுது இவ்வாசிரியர்களால் கையாளப்பட்டு வந்த சில சூத்திரங்களே கிடைத்துள்ளன. சிற்றிலக்கணங்கள் பெருத்துப் பரவியபின் நன்னூலும், நன்னூல் பரவியபின் தொல்காப்பியமும் எவ்வாறு பழக்கவழக்கங் குறைவுபட்டதோ அதுபோலத் தொல்காப்பியம் பிரபலமாய் வழங்கிவந்ததால் விரிந்த அகத்தியத்தைக் கற்றுத் தேர்வாரின்றிப் பழக்கங் கெட்டது மன்றி,அந்நூலைப்போற்றுவாரின்மையாலழிந்தும் போயிற்று. தற்போது தமிழபிமானமுள்ள சிலரைத்தவிர ஏனையோர்க்குத் தொல்காப்பிய மென்னுமோ ரிலக்கண நூலிருப்பதாகக் கூடத் தெரியா தென்னலாம். அச்சின் வாய்ப்பட்டு ஒரு பிரதி பல பிரதிகளாய் விட்டதாலும் புத்தகசாலைகளில் வைத்துப்போற்றுவதாலும் கற்பார்குறையினும் எந்த நூலாயினும் இனி யழிந்துபோகா தென்பது திண்ணம்.

" நிலந்தரு திருவிற் பாண்டிய னவையத்து
அறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட் டாசாற் கரிறபத் தெரிந்து "

எனப் பனம்பாரனுர் தொல்காப்பியத்திற்குச் செய்த சிறப்புப் பாயிரத்திற்கு ஆசிரியர் நச்சினர்க்கினியர் அடியில் வருமாறு உரைகூறினர். அது வருமாறு:—பாண்டியன் மாகீர்த்தி இருபத்துநாலாயிரம் யாண்டு வீற்றிருந்தானுகலின் அவனு மவனவையிலுள்ளோரும் அறிவு மிக்கவரா யிருத்தலின் அவர்கள் கேட்டிருப்ப அதங்கோட்டாசிரியர் கூறிய கடாவிற்கு விடைகூறினர். அகத்தியனர் அதங்கோட்டா சிரியரை நோக்கி 'நீர் தொல்காப்பியர் செய்த நூலினைக் கேளற்க' வென்று கூறுதலானும், தொல்காப்பியனரும் பலகாற்சென்று யான்செய்த நூலை நீர் கேட்டல் வேண்டுமென்று கூறுதலானும், இவ்விருவரும் வெகுளாமலிந் நூற்குக் குற்றங்கூறி விடுவலெனக் கருதிக்கூற, அவர்கூறிய கடாவிற் கெல்லாம் விடைகூறுதலின் "அரிறப' என்றார். அவர் கேளன்மியென்றதற்குக் காரண மென்னையெனில்; தேவ ரெல்லாருங் கூடி யாஞ் சேரவிருத்தலின் மேருத்தாழ்ந்து தென்றிசையுயர்ந்தது; இதற்ககத்தியனுரே யாண்டிருத்தற்குரியாரென்றவரை வேண்டிக்கொள்ள அவரும் தென்றிசைக் கட்போதுகின்றவர் கங்கையாருழை சென்று காவிரியாரையும், பின்னர் யமதக்கினி முனிவருழைச் சென்றவர் மகனர் திரண தூமாக்கினியாரையும் வாங்கிக்கொண்டு புலத்தியனுருழைச்சென்று அவருடன் பிறந்த குமரியார் லோபாமுத்திரையாரை யவர்கொடுப்ப நீரேற்றிரீஇப் பெயர்ந்து துவராபதிப் போந்து நிலங்கடந்த

நெடுமுடியண்ணல் வழிக்கண் அரசர் பதினெண்மரையும், பதினெண்கோடிவேளி ருள்ளிட்டாரையும் அருவாளரையுங் கொண்டுபோந்து காடுகெடுத்து நாடாக்கிப் பொதியின்க ணிருந்து, இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்து இராக்கதரை யாண்டியங்காமை விலக்கித் திரண தூமாக்கினியாராகிய தொல்காப்பியனாரை நோக்கி நீர் சென்று குமரியாரைக் கொண்டுவருக வெனக் கூற, அவரும் எம்பெருமாட்டியை எங்ஙனங் கொண்டுவருவ லென்றார்க்கு முன்னாகப் பின்னாக நாற்கோல் நீளமகல நின்றுகொண்டு வருகவென்றார். அவரு மங்ஙனமேசென்று கூட்டிக்கொண்டு வரும்வழி வையை நீர் கடுகிக் குமரியாரை ஈர்த்துக்கொண்டு போயிற்று. உடனே தொல்காப்பியனார் கட்டளை யிறந்துசென்று ஓர் வெதிர்ங்கோலை முறித்துநீட்ட குமரியாரும் அதுபற்றிக் கரையேறினர். இஃதறிந்த அகத்தியனார் குற்றமென்று குமரியாரையுந் தொல்காப்பியனாரையும் சொர்க்கம் புகாதிரெனச் சபித்தார். தாமொரு குற்றமுஞ் செய்யாதிருப்புழித் தம்மைச் சபித்தமையால் எதிர்த்துச் சபிக்க எண்ணினர். குருவாதலிற் சபிக்கத் துணியாராய் அவரியற்றிய அகத்தியம் வழங்கா தொழியக் கடவதெனச் சபித்தார். அதனால் வெகுண்டாராகலின் அவர்செய்த நூலைக் கேளற்க வென்றார்' என்ற பொருளடங்கக் கூறியிருக்கின்றார்.

இவர் எந்த நூலாதாரங்கொண்டு கூறினாரென் றறிய முடியவில்லை. அன்றி இவர் ஆதாரமாகக்கொண்ட நூற்க ளழிந்துபோயினவோ? தவிர 'தான்பிடித்த முயலுக்கு மூன்றேகாலெனச் சாதிக்கும் நச்சினார்க்கினியர்' என்று பெயர்பெற்றதற் கேற்பத் தன் சொந்தக் கற்பனையோ? அறியேம். அவர்க்குப் பிந்தியகாலத்தாசிரியர் பலர் இதைமறுத்து மிருக்கின்றன ராதலின் அவ்விஷயம் ஈண்டு விடப்பட்டது.

இஃதுண்மையாயின் இதில் ஓர் ஐயம் நிகழலாம். அதாவது, தன்னைச் சபித்த குரவனைச் சபித்தல் கூடுமோ வென்பதே. கீழோர் போலன்றி பெரியோர்க்கு யாதானுமோர் நீதியினால் வெகுளி கோடலறமாகும். அங்ஙன மின்றேற் குற்றமாகும். இவ்வொழுங்கு தப்பின கந்தருவனொருவனைச் சபிக்கு மாற்றலிருந்தும் சபியாது பொறுத்த குற்றத்திற்காக ஜமதக்கினியைப் பிதுர்க்கள் நகுலமாமாறு சபித்தாரென்று பாரதத்திற் கூறியிருப்பதால், தொல்காப்பியனாரும் அகத்திய முனிவருக்காக லோபமுத்திரையாரைப் பிழைத்தேறச் செய்ததால் குற்ற மன்றெனக் கொண்டு சபித்தமையுங் குற்றமாகாதெனக் கொள்க.

தவிர, அகத்தியமுனிவர் சுவர்க்கம் புகுந்தா ரென்று ஒரு நூலுங் கூறவில்லை இச்சாப மேற்கொண்டு குமரியாகிய லோபாமுத்திரையாரும் சுவர்க்கம் புகாமல் பொதியைமலையின் தென்கோடி முடிவாகிய கடற்கரையோரத்தில் குமரியாரென்னும் பெயருடன், மலையாள தேசத்தில் கண்ணகி கடவுளானாற் போல கடவுட்டன்மைபூண்டாளென்று வழங்கப்படுகின்றது. இவ்வரலாறொருவாறு உத்திக்கு இயைந்ததாயு மிருக்கின்றது. அகத்தியமுனிவர் முனிவரில் தலைவரானது மன்றிச் சித்தர்களிலும் முதன்மைபெற்றவராதலால் காயசித்தி முதலியவை பெற்று "சித்தர்க்கு முத்தியில்லை" என்றபடி முத்தியடைந்தவரில்லை. ஆயினும், "தில்லையிற்றிருமூலர் அழகுமலை ராமதேவர், அன்புடனனந்த சயனத்திலே கும்பமுனி" என்றபழம்பாட்டின்படி இவர் அனந்தசயனத்தில் சமாதியாகித் தன் சத்தியை நிலை நாட்டி வெளியாயினரென்று கருதுகின்றனர். தொல்காப்பியனாரும் தவஞ்செய்து கொண்டிருக்கின்றாரென்று சிலர் கூறுவரேனும், எவ்விடமிருந்து தவஞ்செய்கின்றாரென்பது கர்ணபரம்பரைக் கதையிலும் வழங்கக் காணாமையின், இவ்விருவரும் முறையே சபித்துக்கொண்டதை அப்பொழுதைய சான்றோர் முறையே அவர்களாலியற்றப்பட்ட நூற்களுக்காக்கிய காரணத்தால் தொல்காப்பியனார் முத்தியடைந்தனரெனக் கூறுவது சாலும். அதாவது அகத்தியம் சுவர்க்கம் புகுந்ததென்றும் தொல்காப்பியர் சுவர்க்கம் புகுந்ததால் அவர் நூல் மண்ணுலகில் நிலவிற்றென்றும் பொருளாகும். இவ்வாறு கூறியது போற்றுவாரற்று அழிந்துபோன நூலுக்குச் சாபமெனக் காரணங் கற்பித்ததேயன்றிப் பிறிதன்று. நமது எத்தனத்தாற் குலைவுபட்டுப்போன காரியத்திற்குக் கடவுளாற் போயிற்றென்று காரணங் கற்பிப்பது தொன்று தொட்டு நம்மவர் வழக்கமாயிற்று.

ஒருபுடைக் கேள்வி.

அகத்திய முனிவர் நக்ஷத்திரமண்டலத்தி லொருவராறு ரென்றும், இவ்வகத்திய நக்ஷத்திரம் வெளிப்பட்டால் சமுத்திரத்தில் அலைகள் நின்றுவிடுமென்றும் வழங்கப்பட்டு வருகின்றது. இதனாலிந்நக்ஷத்திரம் கண்ணுக்குத் தென்படாதென்ப தறியலாகின்றது. தென் சமுத்திரக் கரையிலிவர் பெயராலோர் தீர்த்தமுண்டு. அத்தீர்த்தத்தில் முதலையாயிருந்து துன்புறுத்திவந்த அப்ஸரஸுக்கு அர்ஜுனன் சாப விமோசனஞ் செய்தான். அகத்தியனார் தனுர்வேதத்தில் தேர்ந்தவராதலால் தன்பால்வந்து வேண்டின அக்கினிவேசிய முனிவருக்கு தனுர்வேதங் கற்பித்திருக்கிறார். நக்கீரருக் கிலக்கணங் கற்பித்தா ரென்றுங் கூறியிருக்கின்றனர்.

இவர் தன் தமையனான இத்மவாகருடைய மனைவியிடம் ஓர் புத்திரனைப் பெற்றாரென்று பாகவதத்திற் கூறப்பட்டுளது. ராமாயணத்தில் வான்மீகிமுனிவர் "அகஸ்தயப்ராதா" என்றொருவரைக் குறிப்பிட்டிருக்கிறார். அவரைச் சுதர்சன ரென்றும், சுதீக்ஷணரென்றுங் கூறுகின்றனர். இதனாலக்காலத்தில் குடும்பவிருத்தியின்பொருட்டு ஓர்வித முறைபற்றிய நெருங்கியவர் மனைவியையுங் கைக்கொள்ளலா மென்று விளங்குகின்றது. இதற்குச் சான்று பாரத முதலிய நூற்களிற் காணத்தக்கது. இவர் கேலன் என்ற அரசனுக்குப் புரோகிதராக விருந்தார். இவ்வரசனைப் பற்றிய வரலாறொன்றும் புலப்படவில்லை.

இவரொருகாலத்தில் கதவம்அடைக்கப்பட்டிருந்த ஓர் மலைக்கோயிலிற்குள் மலர்கடோறும் தேனைச்சேகரித்துக் கொண்டுட்சென்று சிவபூசை செய்து அம்மலைக்கு ஈங்கோய் மலையென்று வழங்கச் செய்தார். இவர் ஸ்வாயம்பு மன்வந்தரத்தில் புலஸ்தியருக்கும் ப்ரீதிக்கும் ஜமாரனைத்தோனியாகப் பிறந்தாரென்று விஷ்ணு புராணத்திற் கூறப்பட்டுள்ளது. இந்திரபாஹு, மயோபுவன், மஹேந்திரன் முதலியவர்கள் இவருடைய குடும்பத்தைப் பிரபலப்படுத்தினர். இதற்குச் சான்றாக அகஸ்த்ய கோத்திரத்தா ரென்றொரு கூட்டத்தாரிருக்கின்றனர். மாமூலபவரென்பவர் அகஸ்த்ய கோத்திரத்தைச் சேர்ந்தவராம். இவர் வம்சத்தில் அகஸ்தி என்றொரு பெண்ணிருந்திருக்கின்றாள். "அகஸ்த்யோகஸ்த்ய புஷ்பச்ச, கௌசிக: குசஸம்பவ:" என்றொரு பழமொழி வழங்கப்பட்டு வருகின்றது. அதாவது அகஸ்திப் பூவிலிருந்து அகத்தியரும் குசப்புல்லிலிருந்து கௌசிகரும் பிறந்தனரென்பதாம். கந்தபுராணத்திலும் அக்நிபுராணத்திலும் இவரை வழிபடவேண்டிய ஒழுங்குகள் விவரமாகக் கூறப்பட்டுள்ளன.

நாராயண வனமென்ற வேதாரணியத்திலும் அம்பைமா நகரத்திலும் அகத்திய முனிவர்க்குத் தனியாகக் கோயிலிருப்பதோடு பல கோயில்களி லிவருக்கு விக்ரகங்களு மிருக்கின்றன. பல விக்ரகங்கள் அயல் நாடுகளுக்கெடுத்துச் செல்லப்பட்டன அவ்வாறெடுத்துச் செல்லப்பட்டவைகளில் இவர் விக்கிரகம் லீடன் ம்யூஸியத்தில் பதினைந்தும், படேவிய ம்யூஸியத்தில் பதினேழுமிருக்கின்றன. அகத்தியமுனிவர் கி.மு. 600 அல்லது 700 வருடங்களுக்குமுன் தென்னாடு வந்தவரென்று மேனாட்டுச் சரித்திராசிரியர் கூறியிருக்கின்றனர். அவ்வாறாகும்போது இற்றைக்குச் சுமார் 2600 வருடங்களுக்கு முன்னால் தென்னாடு வந்தாரென்றறியலாகின்றது. மூச்சங்க முறைப்படி கணக்கிட்டால் இற்றைக்குச் சுமார் 12000 வருடங்களுக்கு முன்னதாகவே வந்தவராயிருக்கவேண்டுமெனக் கருதவேண்டும்.

முற்றிற்று.

R. முத்தையர்.
தலைமைத் தமிழ்ப்பண்டிதர்
ஸ்ரீ மந்திரமூர்த்தி ஹைஸ்கூல்,
திருநெல்வேலி.

அருந்தமிழும், ஆங்கிலமும்.

இனிமையென்னும் பொருள்பயக்குந் தமிழென்பது நமது தாய்மொழி. வடமொழி நியாயமேற்றி வேறு பொருளுரைப்பார் பலருளரேனும் அறிஞர்கள் முடித்துக் கட்டிவைத்த செம்பொருள் இனிமையென்பதேயாகும். இனிமைப்பண்பு இம்மொழிக்கன்றி வேறுபிறமொழிகளுக் கில்லையென்பதை விளக்க இப்பெயரைச் சார்த்தித் தெய்வீகமும் அமைத்தனராவர். மனக்கிடக்கையின் இயற்கை எழுச்சியை இம்மொழியன்றி பிறமொழிகள் இலகுவாகச் செப்பஞ்செய்து காட்டாவாம். மேற்கதிச் செலவு முதலிய உயர்நெறிகளைப் பல அறிஞர்கள் உள்ளதை, அனுபவஞானத்துக்கண் உள்ளபடியே உரைத்து மெய்ந்நிலை கண்டின்புற்றார்கள். இம்மொழியிடத்தும் உலகநூல் அறிவுநூலென பகுப்பு இரண்டுள. உலக நூலாவது, அருந்தல் பொருந்தல்களை மட்டுந் தாங்கிக் கூறுவது. அறிவு நூலாவது, உலக நிலையாமையையும் வீடுபேற்றின் நிலைமையையுந் தாங்கிக் கூறுவது. அறிவென்பது உயிர்நிற்கும் உடலில் எழுந்துலாவும் பரிசம் முதலாய நுகர்ச்சியன்று, மனத்துணைகொண்டு நல்லதன் நலனுந் தீயதன் தீமையையும் பகுத்துணரும் ஆறும் அறிவையென்க. பழந்தமிழ் ஆசிரியர் தொல்காப்பியனாரும், ஐயறிவுபெற்றாரை மாக்கள் என்றும் ஆறுமறிவுபெற்றாரை, மக்கள் என்றும் ஒரு அருமையான நியதி வகுத்துக் காட்டுகின்றனர். இதனால் மனிதனில் மிருகம், மனிதனில் மனிதன், என்கின்ற முறைகள் பெறப்படுகின்றன. ஆறுமறிவு கைகூடப் பெற்றவனே மனிதனில் மனிதன், அவனுடைய அறிவே மெய்யறிவு என்பதாகச் சொல்லக்கிடக்கின்றன. மெய்யறிவு எழும்பிப் படா அறிவுநூல் முதற்காரணமாக நிற்கின்றது. உலக நூலின்நிலை, மேலைய இரண்டோடு முடிந்துவிடுகின்றது. அறிவுநூலின் நிலையோ, பொய்ப்பொருளையும் மெய்ப்பொருளையுஞ் சொல்லிக்காட்டித் திறன்வகுத்து மெய்ப்பொருளை மனத்தில் தாக்கி, எல்லாம் வல்ல இறைவன் இயங்குதிணைக்கண்ணும் நிலைத்திணைக்கண்ணும் நின்றியங்கும் அந்திரியாமித்துவத்தைத் தீயிற் சூடுபோல அபின்னத்தன்மைகாட்டி மனம் புலன்வழி போகாது ஒருமுகப்பட்டு, உலகத்தையும், உயிரையும், இறைவன் இயக்க நிலைமையையும் உணரச்செய்து, மேற்கதிச் செலவையும் உணர, மெய்யுணர்வை வளப்படுத்துகின்றது. ஆகலின் அளவிடற்கரிய ஏற்றம் அறிவு நூற்கே அமைந்து கிடப்பதாகும்.

உத்தர வேதங்கண்டாரும், மெய்யுணர்வி னிலக்கணம் வகுக்குமிடத்து "மெய்ப்பொருள் காண்பது அறிவு" "செம்பொருள் காண்பது அறிவு" என்றும் அறிவுடைமையினிலக்கணம் வகுக்குமிடத்து "நன்றின்பா லுய்ப்பது அறிவு. நுண்பொருள் காண்பதுஅறிவு. மலர்தலுங் கூம்பலும் இல்லது அறிவு. உலகத்தோடு அவ்வது உறைவது அறிவு" என்பனவாதியாகவிதந்தோதுவாராயினர். வேதத்துறையாளராகிய அழகியாரும், மெய்யுணர்த லென்பதற்கு உரைவிரிக்குமிடத்து, பிறப்பு-வீடுகளையும், அவற்றின் காரணங்களையும் விபரீத ஐயங்களான் அன்றி உண்மையான் உணர்தலென்றும், வடநூலார் தத்துவ ஞானமென இதனைக் கூறுவரெனவும் விளக்குகின்றனர். ஆகவே பகுத்துணருந் திறனமைந்த அறிவு, மெய்யுணர்வு என்பதாகப் பெறப்படுகின்றது. அன்றியும் உயிர் முதலியவற்றைக் காட்சி முதலாம் அளவைகளான் அளக்கும் வலியும் இம் மெய்யுணர்வுக் குண்டென்பதை மற்றோரிடத்திலும் அழகியார் விரித்தனராவர். அதாவது பிரமாணங்களால் உயிர்ப்பொருளையும் அதற்கு அநாதியாய் வருகின்ற நல்வினை தீவினைக்கு உற்ற விளைவுகளையும், அவற்றான் அது நாற்கதியுட் பிறந்திறந்து வருதலையும் அது செய்யாமல் அவற்றைக் கெடுத்தற் குபாயமாகிய யோக ஞானங்களையும் அவற்றான் அஃது எய்தும் வீட்டினையும் உள்ளவாறு அறிதலென விளக்குகின்றனர். புறத்துறைபோந்த மாயாவாத மதங்கொண்டாருங் கூட— "ஐயறிவறிந்தவை யடங்கினவரேனும், மெய்யறி விலதவர்கள் வீடதுபெறாரே" என மெய்யுணர்விற்கு ஏற்றங் கூறிவைத்தனராவர். இதுகாறுங் கூறியவாற்றால் மனிதவுடம்பு கொண்டோர்க்கு மெய்யுணர்வு அமைவதே உடம்பு பெற்றபய னென்பதூஉம், அஃது அமையாதாயின் மனிதனில் மிருகமென்பதூஉம், முடிந்த பொருளாகும். உடம்புபெற்ற ஒவ்வொருவரும் இன்பநுகர்ச்சி யொன்றனையே விழைவதன்றித் துன்பநுகர்ச்சியை உவர்த்தல் உலகில் ஆன்ம சுபாவமாகும். இன்புந் துன்புங் கருக்காலத்திலேயே நல்வினை தீவினையின் அளவாக உயிருடன் ஊறிக்கிடக்க அமைக்கப்பட்டனவாகலின் மெய்யுணர்வு ஓங்கப்பெறாத மனிதவுடலினர் இன்பை விழைதலினாலும், துன்பை உவர்த்தலினாலும் கைக்கொள்ளும் பயன் ஓர் அணுத்துணையு மில்லையென்க. இறைவன் அருட் பெருக்கத்தில் ஈடுபட்டுத் திளைத்தார்க்கே யாவும் இன்பு என்னுஞ் சிந்தனை முனைந்து முன்னிற்பதாகும். அன்றி முன்னீட்டிய தீவினைப் பெருக்கமுஞ் சிதைந்து ஒழியப் பெறும். தீவினைப் பயனை நுகர்ந் தொழிக்காது, சிதைந்து ஒழியப் பெறும் என்பதென்னை யெனின், இறைவன் அடித்தொழும்பு பல செய்யச் செய்யத தீவினை யாவுங் கெட, அருட் பெருக்கத்திற்கு நாம் ஓரிலக்காக நிற்குந் தகுதியும் பெறுதும். இதனை ஆளுடைய அரசும், "விண் உற அடுக்கிய விறகின் வெவ் அழல், உண்ணிய புகில் அவை ஒன்றும் இல்லையாம்.—என, அருட் பெருக்கவீறினை ஓர் உபமான முகத்தால் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தன ரன்றோ? குறுகிய இன்பைக் குறிக்கொண்டு மகிழ்தலுக்கு— "கொலைஞர் உலை ஏற்றித் தீ மடுப்ப ஆமை—நிலை யறியா தந்நீர்படிந் தாடியற்றே, கொலை வல்பெருங் கூற்றங் கோட்பார்ப்ப ஈண்டை, வலையகத்துச் செம்மாப்பார் மாண்பு" என நீதி நூலுடையார் நிகழ்த்தியதும் ஈண்டுக் கருதற்பாலதாகும். அகத்தின்பம், புறத்து இன்பம், அகத்துத் துன்பம், புறத்துத் துன்பம் இவைகள் அனைத்தையும் நுனித்து உணர அமைந்து நிற்பது நமது தாய் மொழிக்கணன்றி மற்றோர் மொழிக்கண் இல்லை யென்பது அறிஞர் பலரும் ஒப்பிய தப்பிலாக் கருத்தாகும். இம் மொழிக்கண் பெரும் புலமை வாய்ந்தவர்களுங் கூட "அறிவோர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்"— என்றிருப்பதற் கிலக்கியமாகச் சாத்துவிகப் பண்பே கமழ மிக எளிமை காட்டிப் பேரின்ப நிலையை நினைந்து நினைந்து இன்புற்றுப் பரவசப்பட்டு நாளொழிக்கச் செய்தல் இம்மொழிக்கண் பிறந்த செவ்விய இனிமைப் பண்பாகும். இம் மொழிக்கண் அமைந்து கிடக்கும் அரும் பெரும் பொருள்களைப் பிறமொழிக்கண் அமைத்துச் சுவைகண்டின்புறுதல், சொந்த மகனுக்குஞ் சுவீகார மகனுக்கும் உள்ள பிறழ்வுபோ லாகுமென்க.

(தொடரும்)

N. ராமசாமிபிள்ளை.

கம்பராமாயணம்

பாலகாண்டம்

T.N. சேஷாசல ஐயர், B.A.,B.L., பதிப்பு.

சிற்றடக்கமாய் நல்ல கட்டிடத்தில் புதிய முறையில் பொருள்விளக்கி இப்பதிப்புப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்குப் பதவுரை எழுதிவிட்டால் படிப்பவர் தம் முயற்சியால் பொருள்தேடும் பழக்கம் பெருது போய்விடுவர். ஆதலால் இப்பதிப்பாசிரியர் பதம் பிரித்துத் தொடர்விரித்து அன்வயப் படுத்தி அவாய் நிலைகளை வருவித்து, அரும் பதங்களுக்கு அர்த்தம்கூறி விசேஷக் குறிப்புக் களையுஞ் சேர்த்துக் கூடியவரையில் கம்பருடைய வார்த்தைகளாலேயே அவர் செய்யுளின் கருத்தை விளக்குகின்றார்.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்கு இவ்வாசிரியர் காட்டும் பொருள் புதியன. இவர் செப்பும் உரையாவும் கவியின் இருதயத்தைத் தழுவி எழுதியன.

விலை ரூ. 3 0 0

(வி. பி. சார்ஜ் வேறு)

மானேஜர்,

"கலா நிலயம்"

11, வெள்ளாளர் தெரு,

புரசைபாக்கம்,

சென்னை.

ஏமாங்கதத்

திளவரசன்

T. N. சேஷாசலம், B.A.B.L., இயற்றியது.

இலக்கிய நலங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதல் காதை. அன்பினது வன்மையும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்துசெய்யும் துன்மதிச் சூழ்ச்சியும் கலந்து இக்கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஓர் தனிச்சுவை உளதென்பதை இந்நூலினுள் காணலாம். ஆங்கிலக் கதைவல்ல ஆசிரியர்களின் நூலினுள் தோன்றும் சம்பாஷணை நயத்தைத் தமிழில் தன்னுள் ஏற்ற நூல் இதுபோன் றிருப்பன வெகு சில.

விலை ரூ. 1 0 0

(வி. பி. சார்ஜ் வேறு.)

மானேஜர்,

"கலா நிலயம்"

11, வெள்ளாளர் தெரு,

புரசைவாக்கம்,

சென்னை.

KAMBAN'S KOSALA
or
A Poet's Plea for Culture

by T. N. Seshachalam B.A., B.L., In English

A Succinct exposition of the Poetic Art and the Political Philosophy of Kambar as can be gleaned out of the First Four Padalams of Balakandam.

With a Foreword by Dr. James H. COUSINS

This book is an excellant commentry on the great truth that the art of literature is something of an abstraction, an idealisation that purposely leaves the realities aside. The scope and the purpose of the book will be clear from the author's preface which is quoted below :—

THIS little book is ambitious. Taken by itself it hopes to interpret an ancient seer-poet's judgment on the conflict that is now rampant on all sides between conservative harangues and socialistic utopias. But its main purpose is to introduce to the world of thought and letters, the great Kamba Ramayanam, an extraordinary work of art and book on life, but which would without elucidation be perplexing to all the western methods of analysis and reasoning.

About Kamban, as with many other great personalities, much is not known beyond his works. He lived nearly ten centuries ago and was accepted as the greatest among the poets of his time. The Ramayana which he composed has not been surpassed by anything in the epic literature of the Tamil land. The magnificent classics of the earlier academicians were all his heritage, and his imagination and native genius were considerably assisted by his scholarship. The hoary literatures and philosophy of India alone could have cradled such a genuis, a genius highly poetical, pre-eminently moral, transcendental by the inspired revelations of its seer's ecstasy and best formed to clarify the elemental Truths of life here and hereafter.

Kamban professes Valmiki's Sanskrit epic of the same name as the original for his Ramayanam. But this is almost akin to Shakespeare's indebtedness to Boccacio or Plutarch. Kamban's Ramayanam is the embodiment of a mind, the most creative that ever engaged in the exact portrayal of the details of actual existence, in the dazzling speculations of life among the gods and in the profound complications of passions, human and superhuman. The eternal story of Rama runs in crystal stream of fortytwo thousand three hundred and forty eight lines of sublime grandeur glorifying the Creator and reflecting His creation.

With the Kural and the Gita, the Ramayanam is the most ennobling book that has ever been written. Like many other good things, however, it is not generally understood and made sufficient part of one's being. The realization of the conception of life, individual and social, that gathers and takes shape in one's mind as this wonderful epic is read and re-read ought to recast the destiny of mankind. Price Re. 1-4-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "KALANILAYAM" 11, Vellala St., Purasawalkum, Madras.

வர்த்தமானம்.

சென்னை ஹைக்கோர்ட் நியாயாதிபதி யாயிருக்கும் ஜஸ்டிஸ் தேவதாஸ் என்பவருடைய மகள் ஸ்ரீமதி, சீதா தேவதாஸ் என்பவர் லன்டனில் பாரிஸ்டர் பட்டம் பெற்றுவந்திருக்கிறார்.

***

பம்பாயில் தாசிகளை வைத்து வியாபாரம் நடத்துவதை அடியோடு ஒழிக்கவேண்டுமென்று பம்பாய்நகரச் சபையில் ஓர் நிபந்தனை ஏற்பட்டிருக்கிறது. இதை நிறைவேற்றுவதற்கு ஏற்ற சட்டத்தை உண்டுபண்ணும்படி அரசாங்கத்தாரைக் கேட்டிருக்கிறார்கள்.

***

சென்னைச் சட்டசபையில் சைமன் கமிஷன் விசாரணையில் உதவி செய்வதற்காக ஒரு கம்மிட்டி ஏற்படுத்தவேண்டும் என்னும் பிரேரேபணை ஒன்று கொண்டுவருகிறதற்கு இருக்கிறார்கள். இதைச் சபையார் ஒத்துக்கொள்ளுவார்கள் என்று முழுநம்பிக்கை மந்திரிகளுக்கும் மற்றக் கவர்மெண்டாருக்கும் இருக்கிறது.

***

மந்திரிகளுக்கு தனித்தனி ஒரு காரியதரிசியை நியமனம் செய்ததைக் கவர்னர் ஒப்புக்கொண்டிருக்கிறார். டாக்டர் ராச்சுடின் முதல்மந்திரியின் காரிய தரிசியாகவும், மாணிக்கவேலு நாயகர் இரண்டாம் மந்திரியின் காரியதரிசியாகவும், V. ஜோன் மூன்றும் மந்திரியின் காரியதரிசியாகவும் நியமனம் பெற்றிருக்கிறார்கள்.

***

ராம் கொறட்கார் என்னும் இந்திய ஆகாயக் கப்பற்காரர் ஒருவர் இங்கிலாந்திலிருந்து கண்டாண்டி நோபிலுக்கு 'பூஷ்பக' என்னும் தன் கப்பலில் பிரயாணம் செய்வதற்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்துகொண்டிருக்கிறார். இதற்குமேல் பண உதவி கிடைக்குமானால் கராச்சிக்கு வருவதற்குத் தயாராய் இருக்கிறதாகத் தெரிகிறது.

***

லண்டனில் ஹேர் போர்ன்காட் என்னும் ஒரு ஜர்மனிய வைத்தியர் வியாதிகளைச்சரியாய்க் கண்டுபிடிப்பதற்காக ஒருநூதன யந்திரம் ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார். இது X ரேஎன்னும் ஒளியைஉதவியாக்கொண்டது. இதன்மூலமாக ஒருபடுதாவில்நோயாளியின் படம் காட்டப்படுகிறது. அவனுடைய உள்ளிருக்கும் அவயவங்கள் எல்லாம் நன்ருய்த் தெரிவது மாத்திரமன்றி அவைகளது சுய உருவமும் தெரியும்.

***

பார்வர்ட் (Fordword) பத்திரிகையின் பேரில் கிழக்கிந்திய ரயில்வே கம்பனியார் 10 லக்ஷம் ரூபாய் நஷ்டத்துக்கு இரண்டு வழக்குத் தொடுத்திருக்கிறார்கள். இதன் காரணம் சில நாட்களுக்குமுன் கவுராவுக்குச் சமீபத்தில் நடந்த ரயில்விபத்தைப்பற்றி இந்தப்பத்திரிகை பிரசுரித்த சிலவிஷயங்களே. இதில் ஒன்று பத்திரிகை நடத்தும் கம்பனிபேரிலும் மற்றது பத்திரிகை ஆசிரியர் பிரசும் செய்பவர்கள் பேரிலும் தாவா செய்யப்பட்டிருக்கிறது.

***

ஐக்கிய நாட்டாருடைய யுத்தநிறுத்த உடன்படிக்கையைப் பிரித்தானி ராசாங்கத்தாரும் பிரித்தானி சக்கிராதிபத்தியத்திலடங்கிய மற்ற ராஜாங்கங்களும் ஒப்புக்கொண்டிருக்கின்றன. இதுவரையிலும் இதை ஒப்புக்கொண்டிருக்கிறவர்கள், பிரித்தானிய ராசாங்கத்தார் ஜர்மனி பிரான்சு பெல்ஜியம் இத்தாலி போலன். மற்றத்தேசத்தார்களும் சீக்கிரத்தில் இதை ஒப்புக்கொள்ளுவார்கள் என்று தெரிகிறது.

***

ஆகாய விமானப் பயிற்சிக்காக ஐந்து இந்தியரைத் தெரிந்து எட்ல்வேயர் என்னுமிடத்தில் இருக்கும் ஆகாய விமானப் பயிற்சிசெய்யும் பள்ளிக்கூடத்தில் பயிற்சிக்கு அனுப்பியிருக்கிறார்கள். இவர்கள் மூன்று வருஷம் அந்தவிடத்தில் வேலை பழகவேண்டும். தெரிந்தெடுக்கப்பட்டவர்களில் இருவர் வங்காளத்திலிருந்தும் இருவர் பம்பாயிலிருந்தும் ஒருவர் சென்னையிலிருந்தும் சென்றவர்கள்.

இவர்கள் ஐவரும் இந்துக்கள். அது மாத்திரமல்லாமல் போர்த்தொழில் நடத்தும் சாதியாரைச்சேர்ந்தவர்களுமன்று. இவர்கள் பெயர் D. சக்ரவர்த்தி, மோகன்லால் பீருனலால் மேதா, விஷ்ணு லீலாராம் சந்திரமணி, G. S. சுப்ரமணியம், K. M. ராகா.

***

ஜெனரல் மோட்டார் கார்பரேஷன் என்னும் மோட்டார் வண்டிகள் செய்யும் ஒருபெரிய கம்பனியார் இந்தியாவில் மோட்டார் வண்டிகள்செய்ய ஆரம்பிக்கப்போகிறார்கள். இந்தக்கம்பனி தனக்குக் கீழ் 72 கம்பனிகளை அடக்கியுள்ளது. இதற்குச் சேர்ந்த மூலதனம் மற்றைய கட்டிடங்கள் தொழிற்சாலைகள் எல்லாம் கணக்கிட்டால் இந்திய ரயில்பாதைகளில் செலவாயிருக்கும் பணத்துக்கு மூன்றுபங்கு அதிகமாயிருக்கும். சென்ற ஒரு வருஷத்திலே இந்தக் கம்பனியாரால் புதிதாய்ச் செய்யப்பட்ட பிரயாண வண்டிகளும் சாமான் வண்டிகளும் 15,54,557. இதற்கு வேண்டிய யந்திரங்கள் கருவிகள் எல்லாம் சீக்கிரத்தில் வந்து சேரும். பம்பாயிலேயே இதன் தொழிற்சாலை ஏற்படுத்த விருக்கிறார்கள். இதற்குமூலதனம் 1 கோடி ரூபாய். இதற்குப் பங்காளிகள் எவர்களாயு மிருக்கலாம். இதுபோலவே இந்தக் கம்பனியாருக்குப் புறதேசங்களில் 23 தொழிற்சாலைகள் உண்டு. இந்தக் கம்பனி ஏற்படுவதனுல் மோட்டார் உபயோகிப்பவர்களுக்கு அனேக வசதிகள் ஏற்படுவதுடன் அனேகருக்கு வேலையும் தேசத்துக்கு நன்மையுமுண்டாகு மென்று சொல்லுகிறார்கள்.

***

டில்லிக்கும் சென்னைக்கு மிடையில் நேரான ரயில் பாதை அனேக வருஷகாலமாக ஏற்படுத்தவேண்டுமென்று இந்திய அரசாங்கத்தார் எண்ணியிருந்தது இப்போ முடிவாய்விட்டது. நைஜாம் அரசாங்கத்தார் 1922ம் வருஷம் தொடங்கிய புதிய ரயில்பாதை வேலை இப்போ முடிவாய்விட்டது. இந்தவழி முடிவானதுடன் வட இந்தியாவுக்குப் பிரயாணம் மிகவும் இலகுவாயிருக்கும். புதிதாய் நைஜாம் அரசாங்கத்தார் போட்ட பாதை 14568 மைல் நீளமுள்ளது. இதற்குச் செலவானபணம் 250 லக்ஷம். இதில் 80 லக்ஷம்வரையில் பாலங்கள் கட்டுவதற்கே செலவாய்விட்டன. கோதாவரிக்கு மேலாகக் கட்டபட்டிருக்கும் பாலம் 3520 அடி நீளமுள்ளது. இது தான் இப்போது இந்தியாவிலிருக்கும் பாலங்களுள் எல்லாம் மிக நீண்டது. இந்தவழியாய்ப் பிரயாணிவண்டிகள் அக்டோபர் மாதத்திலிருந்து விடப்போகிறார்கள்.

இதுவரையும் வடஇந்தியா போவதற்குப் பம்பாய்மார்க்கமாய் போகவேண்டி இருக்கின்றது. 1750 மைல் பிரயாணம் செய்வதற்கு 71 மணிநேரம் செல்கின்றது. இனிமேல் சென்னையிலிருந்து புறப்படுபவர்கள் 45 மணிநேரத்தில் 1850 மைல் பிரயாணம் செய்து டில்லியில் சேரலாம். ஒருநாள் பிரயாணமும், ஏறக்குறைய 400 மைல் தூரமும் குறைந்துவிடுகின்றன.

***

இலங்கை அரசாங்கச் சீர்திருத்தக் கமிஷன் அறிக்கை பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

இந்த அறிக்கையின்படி 21 வயதுக்குமேல் ஆண்கள் எல்லாரும் 30 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் எல்லாரும் வோட்கொடுக்கலாம் என்றும், இப்போது இருக்கும் சட்டசபையை ஒழித்து அதற்குப்பதிலாக இராசாங்கசபை ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்றும், அங்கத்தினருக்குள் வெவ்வேறு சாதியாருக்குப் பிரத்தியேகமான அங்கத்தினர் தெரிய செய்யப்படாதென்றும், காரிய நிர்வாகசபை ஒன்று 10அங்கத் தினருள்ளதாக ஏற்படுத்தவேண்டும் என்றும், இப்பத்து அங்கத்தினருள் எழுபேர் இராசாங்க சபையாரால் தேர்ந்தெடுக்கப் படவேண்டுமென்றும், எஞ்சிய மூவரும் அரசாங்க உத்தியோகஸ்தர்களுமாயிருக்க வேண்டும் என்றும், தேசாதிபதி இதுவரையிலும் பார்த்துவந்த கடமைகளை விட்டு இனிமேல் இச்சபைகளின் மேற்பார்வை மாத்திரம் வகிக்கவேண்டும் என்றும், முன் தேசாதிபதிக்கு இருந்த அதிகாரம் அதிகப்படுத்தவேண்டுமென்றும் ஏற்பட்டிருக்கிறது"

இப்புது இராசாங்கசபைக்கு 65தேர்தல் செய்யப்பட்ட பிரதிநிதிகளும் அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டவர்களும் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் சிலரும் அங்கத்தினராவார்கள்.

THOUGHTS FOR STATESMEN

from

MONTESQUIEU AND TOCQUEVILLE

IN ENGLISH

by

T. N. SESHACHALAM B.A., B.L.

WITH A FOREWORD

by

Sriman S. Sreenivasa Aiyangar

The purpose and Scope of the book is well set out in the opening paragraph of the author's preface which is quoted below:—

The course of history may vary in some details with different countries and at different periods, but human nature, the fundamental spring of all actions remains constant and shows a remarkable uniformity throughout. A proper understanding of that phase of human nature which specially manifests itself in the carrying on of a corporate existence should be an invaluable equipment to those who are engaged in the making or the maintaining of a nation. Philosophical historians have attempted to find the common principles and emotions which, operating upon men of every climate and degree of civilization, produce certain results. With their keen powers of observation and insight they gather a comprehensive view of our society, institutions and destiny. An attempt is made to collect in this book some of the very important observations made and far-reaching results arrived at by two notable French writers of eminence and perhaps not very well known to an ordinary English reader.

It is needless to add that the selection of these passages has been made with an eye to their applicability to the present conditions in India.

Price Re. 1-8-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*"
11, Vellala Street, Purasawalkum, Madras.

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM

OF

CEYLON CIVIL SERVICE

WITH AN APPRECIATIVE

FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit,

Price Rs. 5-8-0. (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"

11. VELLALA STREET,

Purasawalkam, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)